பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 21, வெள்ளிக்கிழமை 03.02.2017 | கதிர் 90

## வித்தியா வழக்கின் விசாரணைகள் விரைவில் முடியும்

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் விசாரணைகள் முடிவுறும் நிலையில் உள்ளன எனவும் விரைவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

மாணவி வித்தியா கொலை

பக்கம் 20 >>>

# அரசமைப்பு மாற்ற முயற்சிக்கு இணங்கியது சுதந்திரக் கட்சி

### முரண்டு பிடித்தவர்களுடன் ஜனாதிபதி முயன்று சமரசம் செய்தமையை அடுத்து

கொழும்பு, பெப்ரவரி 03

**நல்லாட்சி அரசில் இடம்பெற்றபடியே, புதிய அரசமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்பில் தொடர்ந்து முரண்டுபிடித்து வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலசுற்றுப் பேச்சுகள் நடத்தி, அவர்களைச் சமரசப்படுத்தி, அரசமைப்பு மாற்றத்துக்கு இணங்கிவர வைத்திருக்கின்றார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்தத்தகவல் அரசுத்தலைமையால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைமைக்கும்தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக 'காலைக்கதி'ருக்கு அறியவந்தது.

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக, முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புக் கவுன்ஸிலாகவும் செயற்படத் தொடங்கிவிட்டது என்பதும் –

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக அரசமைப்புக் கவுன்ஸில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்ட

பக்கம் 20 >>>

## வடமாகாண முதல்வருக்கு நேற்று கிளிநொச்சியில் பலத்த பாதுகாப்பு

### ரி-56 துப்பாக்கிகள் சகிதம் பொலிஸார்

கிளிநொச்சி, பெப்.03

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் வகுப்பறைக்கட்டடத்திறப்புவிழாவுக்குச்சென்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு வழமைக்கு மாறாக

பக்கம் 20 >>>

## சுமந்திரன் எம்.பி. கொலை முயற்சி; கற்பனைக் கதை என்கிறார் சுரேஷ்

கொழும்பு, பெப்.03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனை முன்னாள் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திக் கொலை செய்வதற்கு முயன்றனர் என்று கூறப்படுகின்றமை வெறும் கற்பனைக் கதை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனுக்கு எதிராகத்தாக்குதல் நடத்துவதற்குச் சதித்திட்டம் தீட்டினர் எனக் கைது செய்யப்பட்ட நால்வரும் கிளிநொச்

பக்கம் 20 >>>

## விக்கியை வைத்திருந்தால் அனைவருக்கும் ஆபத்தாம்

### இப்படிச் சொல்கிறார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, பெப்.03

வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனை தொடர்ந்தும் அப்பதவியில் வைத்திருந்தால் ஒட்டுமொத்த இலங்கைக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று ஒன்றி

பக்கம் 20 >>>

## படையினரின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் கேப்பாப்பிலவில் தொடர்ந்தது போராட்டம்

### நிலம் விடுவிக்கப்படும் வரை தொடரும் என மக்கள் உறுதி



முல்லைத்தீவு, பெப்.03

விமானப் படையினர் ஆக்கிரமித்துள்ள தமது காணிகளை மீளவும் தங்களிடம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

படையினரின் அழுத்தங்கள் எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும் தாங்கள் இந்தப் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர் என மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் போராட்டத்தை நடத்தும் இடத்திற்கு நேற்றுச் சென்ற முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கரைதுறைபற்றுபிரதேச செயலாளர் ஆகியோர்

பக்கம் 20 >>>

## 'சைட்டம்' எதிர்ப்பில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, பெப்.03

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட பேரணியின் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதி செயலகத்தை நோக்கிச் செல்ல முற்பட்டபோதே லோட்டஸ் வீதிக்கு அருகில் வைத்து பொலிஸார் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பக்கம் 20 >>>

## அரச மருத்துவர்கள் இன்று 4 மணிநேர வேலை நிறுத்தம்

கொழும்பு, பெப்.03

அரச மருத்துவர்கள் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை நாடளாவியரீதியில் நான்கு மணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றிரவு அறிவித்தது.

'சைட்டம்' மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே அடையாள வேலை நிறுத்தம் இடம்பெறவுள்ளது.

இன்றுகாலை 08 மணிமுதல்

பக்கம் 20 >>>

### அளப்பு அருணாசலம்



அப்ப... உவரை விட்டாப் பிழை எண்டு வளைக்கப் பாக்கிறம் போல...

## வடக்கு மாகாணத்தில் நேற்று இ.போ.ச. பேருந்துகள் பகிஷ்கரிப்பு

### பொதுமக்கள், மாணவர்கள் பெரும் சிரமம்

- எஸ்.நிதர்ஷன் -

வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மீளவும் தங்களிடம் வழங்க வலியுறுத்தி இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்ற பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்தும் இ.போ.ச.பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வடமாகாண ரீதியில் இ.போ.ச. பணியாளர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகளின் நன்மை

பக்கம் 20 >>>



# பெண்களின் அரசியல் பங்களிப்பை அதிகரிக்கும் விழிப்புணர்வு செயற்பாடு

## நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது




- எஸ்.நிதர்ஷன் -

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசியலில் பெண்களின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமென வலியுறுத்தி 'தேசத்திற்கான பெண்களின் உரிமைக் குரல்' எனும் தொனிப்பொருளின் கீழ் யாழ்.நகரில் நேற்று வியாழக்கிழமை துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் கையெழுத்துவேட்டையும் இடம்பெற்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் ஜேர்மன் தூதரகமும் இணைந்து யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டன.

கடந்த காலங்களில் அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. எதிர்வரும் உள்ளூராட்சித்தேர்தலில் பெண்களின் பங்களிப்பினை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாடளாவியரீதியில் இந்த வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது என அதன் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதன்போது அரச திணைக்களங்களில் பணியாற்றும் பெண் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர். (ம)

# முன்னாள் போராளிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டாம்

## சுமந்திரன் எம்.பி.கொலை முயற்சி தொடர்பிலும் தெளிவுபடுத்தல் வேண்டும் என்கிறார் சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்கொலைமுயற்சியில் நடந்தது என்ன என்பது தொடர்பாக அரசாங்கம்நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள்போராளிகள்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களைக் கைதுசெய்ய வேண்டாம்என்று அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ள அவர், மாறாக அவர்கள் அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட்டால் மீண்டும்யுத்தம்வெடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு அறிக்கைதாக்கல் செய்யப்படுவதன் மூலம் மக்களுக்கு உண்மை நிலையை அரசு தெளிவுபடுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சுமந்திரனுக்கான கொலை அச்சுறுத்தலின் பின்னணியில் முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விக்குபதிலளிக்கும்போதே அவர் அதனைத் தெரிவித்தார்.

சுமந்திரன் கொலை முயற்சி தொடர்பான விடயத்தை புலனாய்வுப்பிரிவினரேதெரிவித்திருக்கின்றனர். அரசியல்தேவைகளுக்காக அப்படிக் கூறப்பட்டதாஎன்பதுஎமக்குத்தெரியாது.

அரசுடன் சேர்ந்தோ இணைந்தோ செயற்பட வேண்டியதேவைதமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு கிடையாது. கூட்டமைப்பைச் சார்ந்த எவராவது அரசுடன் சேர்ந்து இயங்க முற்பட்டால் அவர்கள் தொடர்பாக கட்சி நடவடிக்கை எடுக்கும்.

12 ஆயிரம் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டனர் என அரசு கூறுகின்றது. அவ்வாறு இணைக்கப்பட்டவர்கள் குடும்ப சிந்தனையுடன், குடும்பத்தின் அன்றாட சீவியத்திற்கான சிந்தனையுடன் இருக்கின்றபோது கொலை முயற்சிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் போராளிகள் தொடர்ச்சியாக இவ்வாறான நிலைகளுக்கு ஆளாக்கப்படுவார்களாயின் இன்னும் 5 அல்லது 10 வருடங்களுக்குள் மீண்டும் யுத்தம் வெடிக்கக்கூடிய நிலை ஏற்படும் என்பதை அரசுக்குதெரியப்படுத்துகின்றோம்.

1977 ஆம்ஆண்டுஜே.வி.பி கிளர்ச்சியை அடக்கிய பின்னர் 1988, 1989 களில் மீண்டும் அவைதலைதூக்கின. ஆகவே, முன்னாள் போராளிகள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கவேண்டாம்என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் படையினர் மீது கல் வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றதைப் போன்ற நிலை இங்கும் ஏற்படலாம் என்றும் சிவாஜிலிங்கம்தெரிவித்தார். (ம)

# அமெரிக்க இராஜாங்கச் செயலருக்கு இலங்கை அரசு வாழ்த்து தெரிவிப்பு

கொழும்பு, பெப்.03

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் ரில்லர்சனுக்கு இலங்கை அரசு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

"அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலாளருடன் இணைந்து செயற்படுவதற்கும் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கும் விரும்புகிறோம்" என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர டுவிட்டரில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஓ)

# குமார் குணரட்ணத்துக்கு இலங்கைக் குடியுரிமை

முன்னிலை சோலிசக் கட்சியின் இணைப்புச் செயலாளர் குமார் குணரட்ணத்துக்கு இம்மாதம்முதலாம்திகதிமுதல்இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்துவரும்மூன்றுமாதங்களுக்குள் இவரது ஆஸ்திரேலியக் குடியுரிமையை இரத்துச் செய்யுமாறு அதிகாரிகளால் குமார் குணரட்ணத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் வந்த குமார் குணரட்ணம், குடிவரவு மற்றும் குடியகல்வு விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டில் 2015ஆம் ஆண்டு நவம்பரில் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடம் விளக்கமறியலில் வைக்கப்பட்டபின்னர் 2016ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி விடுதலைசெய்யப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னிலை சோலிசக் கட்சியின் 2ஆவது வருடாந்த மாநாட்டின்போது குமார் குணரட்ணம் கட்சியின் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார். (ஓ)

# முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் படுகொலை வழக்கு ஏப்ரலில்!

கொழும்பு, பெப்.03

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 13பேர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்டமைதொடர்பானவழக்கு ஏப்ரல் 6 ஆம்திகதி முதல் கம்பஹா சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த வழக்கு நேற்று கம்பஹா உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி வெலிவேரிய காந்தி விளையாட்டு மைதானத்துக்கருகில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். (ஓ)

## அமெரிக்காவின் பயணத் தடை; வெளிவிவகார அமைச்சின் அறிவிப்பு

அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பயணத் தடை காரணமாக அந்நாட்டு விமான நிலையங்களில் இலங்கையர்கள் எவரும் பாதிப்புக்குள்ளாகி இருந்தால் அவர்கள் உடனடியாக நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறியத்தருமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ள இலங்கையர்கள் 001917 597 7009 எனும் இலக்கத்தினூடாக நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சஷி வெல்கமவின் விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவின் விளக்கமறியல் மார்ச் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதிகளை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 2016ஆம் ஆண்டுடிசெம்பர் 20ஆம்திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சஷி வெல்கமவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டபோதேகொழும்பு மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை இலங்கைப் போக்குவரத்துச்சபையின்முன்னாள் தலைமை நிதி முகாமையாளரைக் கைதுசெய்யுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சந்தேகநபர் தற்போதுநாட்டைவிட்டுத்தப்பிச் சென்றுள்ளார் என குற்றப்புலனாய்வுப் பிரிவினர்நீதிமன்றில் தெரிவித்தனர். (ஓ)

## ரக்பி வீரர் தாஜுதீன் கொலை வழக்கு

# முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அழைப்புகள் தொடர்பாக விசாரணை

கொழும்பு, பெப்.03

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலை செய்யப்பட்ட தினத்தில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க ஜனாதிபதி செயலகத்துக்கு மேற்கொண்ட அழைப்புக்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தின் எந்தப் பிரிவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க அழைப்புக்களை மேற்கொண்டார் என கண்டறிவதற்கு விசாரணைகள் நடத்தப்படுகின்றன என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இது தொடர்பாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இரு அதிகாரிகளுக்கு வந்த அழைப்புக்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

தாஜுதீன் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் குற்றவியல் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரை பெப்ரவரி 16 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஓ)

# வடக்கிலோ, தெற்கிலோ எவரும் சட்டத்தைக் கையில் எடுக்க இடமில்லை

கொழும்பு, பெப்.03

வடக்கில் தலைதூக்கி வரும் வாள் வெட்டுச் சம்பவங்கள் குறித்து காத்திரமானமுறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தெற்கிலும் சரி, வடக்கிலும்சரி, எந்தத் தரப்பினரும் சட்டத்தைத் தமது கையில் எடுக்க இடமளிக்க முடியாது.

மேற்கண்டவர்று அறுத்து உறுத்துத் தெரிவித்துள்ளார் பாதுகாப்புத்துறை இராஜாங்க அமைச்சர்ருவான்விஜேயவர்த்தனா.

150 பாடசாலைகளில் கம்பஹா மாவட்டத்தின் மனையியல் பயிற்சி வகுப்புகளில் சித்தி அடைந்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில்வாள்வெட்டுச்சம்பவங்களைநடத்திவரும்கோஷ்டிகளைக்கண்டறிந்துநடவடிக்கை மேற்கொள்வதற்கு பொலிஸா



ரும் இராணுவத்தினரும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார்கள். எனினும் அரசுக்கு எதிரான தரப்பினர், நாட்டின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாக நிலைமையை திரித்துப் பிரகடனம் செய்கின்றார்கள்.

வடக்கில் நடைபெறும் சம்பவங்கள் பயங்கரவாதம் அன்று. இராணுவத்தினரும் பொலிஸாரும் மக்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்கி வருகின்றனர்.

அரசுக்கு எதிரான சக்திகள் வடக்குமக்களிடம்பயஉணர்வை உண்டாக்க முனைகிறார்கள். - என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் மனித உரிமை மீறல் விசாரணை அவசியம்

## சர்வதேச குற்றவியல் சட்டத்தரணி கேய்ட்லின் ரீன்ஞர் கொழும்பில் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப்.03

சிவில் யுத்தங்களின் போது இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடத்தப்படும் குற்றவியல் வழக்கு விசாரணைகள் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் நடத்தப்படவேண்டியமை அவசியம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அப்படியன்றிக் குற்றவியல் வழக்கு விசாரணைகள் மோசமான முறையில் நடத்தப்படுமானால் - இந்த நடைமுறையானது நியாயமானதாக நோக்கப்படாதுவிடின்- அதிலிருந்து பெறப்படும் செய்தியும் கற்றுக் கொள்ளக் கூடியவிடயமும்பாதகமானவையாகவே அமையும்.

-இவ்வாறு சர்வதேச குற்றவியல் சட்டத்தரணி கேய்ட்லின் ரீன்ஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அப்படியான கசப்பான அனுபவங்கள் அடுத்த தலைமுறையினர் மத்தியிலும் பதிந்துவிடும் என்றும் அவர் நினைவுறுத்தினார்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை ''நல்லிணக்கத்தில் சிறுவர்களின் வகிபாகம்: சர்வதேச அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிடும்போது அவர்இந்தவிடயங்களைத் தெரிவித்தார்.

தற்போது மியன்மாரிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் அலுவலகத்தில் நிலைமாற்றுகால நீதி தொடர்பான முக்கிய பொறுப்பை வகிப்பவரான கெய்ட்லின் சியரோலியோன், இலங்கை உட்படப் பல உள்நாட்டு யுத்தங்கள் இடம்பெற்ற நாடுகளில் குற்றவியல் வழக்கு விசாரணைகளை நடத்திய சட்டத்தரணியாவார்.

இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிலைமாற்றுக் காலப் பொறிமுறைகளில் குற்றவியல் வழக்கு விசாரணைகளே முதன்மையான அவதானிப்புக்கு உரிய விடயங்களை அமைந்திருக்கின்றன.

நடைபெற்றவை (அநீதிகள்) தொடர்பில் நீதியைக் கோரி நிற்கிறார்கள் என மக்கள் கூறும்போது, அவர்கள் அர்த்தப்படுத்த விளைவது குற்றவியல் வழக்கு விசாரணைகளூடாக குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதையே.

இது மாத்திரமே தனித்துவமான நடைமுறை கிடையாது. அனைத்து நீதிகளையும் இந்த நடைமுறை பெற்றுத்தரும்என்ற சுமை இன்றிய நிலையில் செயற்படும் போதே இது சிறந்த பெறுபேறைப் பெற்றுத்தரும்.

தனிப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை எதிர்கொள்வது மட்டுமன்றி மக்களைஅறிவூட்டுவதற்கான சக்தியையும் குற்றவியல் வழக்கு விசாரணைகள் கொண்டுள்ளன.

அதாவது அடுத்த தலைமுறையை அறிவூட்டும் தகைமையை அவை கொண்டுள்ளன.

குற்றவியல் வழக்கு விசாரணைகள் மோசமான முறையில் நடத்தப்படுமானால் - இந்த நடைமுறையானது நியாயமானதாக நோக்கப்படாதுவிடின் -அதிலிருந்து பெறப்படும் செய்தியானது - கற்றுக் கொள்ளக் கூடிய விடயமானது பாதகமானதாகவே அமையும்.

இதனை முகங்கொடுத்து அனுபவிக்கும் சிறு வர்கள் அடுத்த தலை முறைக்கும் இந்த மோசமான அனுபவத்தை எடுத்துச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அந்த வகையில் எவ்வாறு குற்றவியல் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது - எவ்வளவு தூரம் அது நியாயமானதாக அமைந்துள்ளது - நீதிமன்றத்துக்கு முன்னால் ஆஜராகும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் உரிமையை எவ்வாறு நடத்துகின்றனர் என்பவையும் கற்றுக் கொள்ளும் அந்த நடைமுறைக்கு அவசியமானதாகும்.

குற்றமிழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கும் கலாசாரத்தையன்றி அதனை முடிவுக்குக்கொண்டு வரும் நடைமுறையைக் காண்பிப்பதும் முக்கியமானதாகும். - என்றார். (ஐ)

## சைக்கிள்களுக்கு இலக்கத்தகடுகள்

மந்திகை, பெப்.03

பருத்தித்துறைப் பிரதேச சபையினரால் 2017 ஆம் ஆண்டுக்கான சைக்கிள் இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சைக்கிள் இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டையைக் காண்பித்து இலக்கத் தகட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-40)

## பருத்தித்துறை - மருதங்கேணி வீதி திருத்தம்; மாற்றுப்பாதையை உபயோகிக்கக் கோரிக்கை

பருத்தித்துறை - மருதங்கேணி வீதிப்புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதனால் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்துப் பாதையில் மாமுனைச் சந்திக்கு அருகாமையாக பால வேலைநடைபெற்று வருகிறது. இப்பாலத்துக்கு அருகாமையில் மாற்று வீதி அமைக்க முடியாத சூழ்நிலை காரணமாகப் பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணி நோக்கி வருபவர்கள் மாமுனைச் சந்தியூடாக வடக்குப் பக்கமாகச் சென்று மீண்டும் செம்பியன் பற்றுச் சந்தியை வந்தடைந்து தமது பயணத்தைத் தொடரலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருதங்கேணியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்பவர்கள் செம்பியன்பற்றுச் சந்தியூடாக வடக்குப் பக்கமாகத் திரும்பி மாமுனை - செம்பியன்பற்று வடக்கு இணைப்பு வீதியூடாகப் பயணித்து மீண்டும் மாமுனைச் சந்தியை வந்தடைந்து தமது பயணத்தைத் தொடர முடியும்.

இந்நடைமுறை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணியில் இருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 6 மணிவரை நடைமுறையில் இருக்கும் எனவும் இதற்குச் சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ-40)

## திருகோணமலை பத்திரகாளி அம்பாள் எண்ணெய்க்காப்பு

திருகோணமலை ஸ்ரீ ஆதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆறாம் திகதி காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

அதற்கான பூர்வாங்கக் கிரியைகள், நிகழ்வுகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன. இன்று வெள்ளிக்கிழமை காலை 5 மணி தொடக்கம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒருமணிவரைஎண்ணெய்க்காப்புச் சாத்தலும் இடம்பெறும். (உ)

## யோகாசனப் பயிற்சி

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் யோகாசனப் பயிற்சி அறிமுக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.


மணமக்கள் விபரம்

☎ 0777164524

திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m

சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 6711 \| கு<br>1980 \| பருத்தித்துறை \| 174 cm<br>Assistant Managerr \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்) \| கிறிஸ்தவம் | 6783 \| கோ<br>1980 \| மாதகல் \| 170 cm<br>Liberian \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| செவ்: 7 |
| 5913 \| வே<br>1980 \| கொழும்பு \| 170 cm<br>Computer Admin \| இலங்கை<br>அத்தம் (கன்னி) \| கி.பா: 27 \| செவ்: 12 | 7095 \| ப<br>1982 \| பண்டத்தரிப்பு \| 157 cm<br>Teacher \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கிறிஸ்தவம் |
| 3798 \| வே<br>1980 \| மீசாலை \| 172 cm<br>Doctor \| இலங்கை<br>பூசம்(கடகம்) \| கி.பா: 32 \| செவ்: 12 | 5932 \| வே<br>1985 \| திருநெல்வேலி \| 156 cm<br>Doctor \| இலங்கை \| செவ்: 7<br>மகம் (சிம்மம்) \| கி.பா: 27 \| சூரி செவ்: 9 |
| 5412 \| கோ<br>1976 \| தாவடி \| 170 cm<br>Accountant \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 63 \| செவ்: 1 | 5809 \| கோ + வே<br>1970 \| நல்லூர் \| 148 cm<br>Authorized Officer \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 34 |
| 7162 \| வே<br>1990 \| இருபாலை \| 178 cm<br>Bank Officer \| இலங்கை<br>பூசம்(கடகம்) \| கி.பா: 33 | 4014 \| வே<br>1971 \| திருநெல்வேலி \| 167 cm<br>Teacher \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா: 12 \| செவ்: 4 |

அருந்ததி இணைய திருமண சேவை

www.arunthathee.com

480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27


## புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலிகளை சுதந்திர தினத்தில் விடுவிக்குமாறு கோரிக்கை

### சட்டத்தரணி அஜித் பிரசன்ன ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொலைக் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனை அனுபவித்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களையும் சுதந்திர தினத்தை முன்னிட்டுவிடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மிருசுவிலில் 9 இளைஞர்களைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட - இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த-சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக வருகை தந்திருந்த சட்டத்தரணி அஜித் பிரசன்ன, சுனில்ரத்நாயக்கவை விடுதலை செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கும் மகஜர் ஒன்றை நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மாத்திரமன்றி மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள சுனில் ரத்நாயக்கவையும் விடுதலை செய்ய வேண்டும்.

இரண்டு பிரிவுகளாக பிரிந்து நாம் யுத்தம் செய்தோம். இன்று நாட்டில் அனைவருக்கும் சுதந்திரம் கிடைத்துள்ளது. எனினும் இரண்டு தரப்புகளிலும் மோதலில் ஈடுபட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தில் ஈடுபட்ட உயர் மட்டத் தலைவர்களான கருணா அம்மான், பத்மநாதன் போன்றவர்கள் வெளியில் இருக்கின்றார்கள். அவர்களைவிடக் கீழ் மட்டத்தில் இருந்து தங்களது கடமையைச் செய்தவர்கள் சிறையில் இருக்கின்றார்கள்.

நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பது உண்மையாயின் இரண்டு பக்கங்களிலும் உள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அதனையே நாம் வேண்டி நிற்கின்றோம். விடுதலைப் புலிகள் தரப்பில் எவருக்காவது கொலைக் குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். 80 களில் விஜயகுமாரதுங்க யாழ்ப்பாணம் சென்று சந்தேக நபர்களை பரிமாற்றிக் கொண்டார். அதேபோல் செயற்பட முடியும். - என்றார். (ஐ)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# சமரச அழைப்பு பயன் தராது

'சாட்சிக்காரனின் காலில் விழுவதை விட சண்டைக்காரனின் காலில் வீழ்வது மேல்' - என்பார்கள். அந்தத் தந்திரத்தை - சாணக்கியத்தை - மனதில்கொண்டுவிட்டார் போலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

"மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்புவதை விடுத்து, தீர்வுத் திட்ட நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்பட முன்வாருங்கள்" - என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் விடுத்திருக்கும் அழைப்பு இந்தப் பழமொழியைத்தான் நினைவூட்டுகின்றது.

"பிளவுபடாத நாட்டுக்குள் - அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க - ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அத்தகைய தீர்வைக் காண்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ உதவவேண்டும். அது உங்களது புனிதமான கடமை. அதற்காக எங்களுடன் சேர்ந்து பணியாற்ற வாருங்கள்." - என்று மஹிந்த ராஜபக்ஷவை விநயமாக வேண்டியிருக்கின்றார் சம்பந்தன்.

அதுவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் மேடையில் வைத்துக்கொண்டு இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார் அவர்.

இந்த அழைப்பை விடுத்த அவருக்கும் சரி, அதை செவி மடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதியில் தொடங்கி நாட்டுமக்கள் வரை அனைவருக்கும் சரி, இது சம்பந்தமாக ஒரு விடயம் தெளிவாகத் தெரியும்.

அது - சம்பந்தனின் இந்தப் பணிவான அழைப்பு - அல்லது வேண்டுகோள் - 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' முடியும். 'எருமைத் தோலில் மழை பெய்த மாதிரி'த்தான் இருக்கும் என்பதே அது.

இத்தகைய அழைப்புகளை, நீதி, நியாயத்துடன் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி இல்லை என்பது தெட்டத் தெளிவானது; வெளிப்படையானது.

அவரைப் பொறுத்தவரை நாட்டுக்குத் தீர்வு, மக்களுக்கு அமைதி, சமூகத்துக்கு சமாதானம் என்பவையெல்லாம் இன்று முக்கியமானவையல்ல. இழந்த ஆட்சியைத் தாம் எப்படியாவது கைப்பற்றி, மீண்டும் அதிகாரத்துக்கு வருவது மட்டுமே அவருக்குள்ள ஒரே - பிரதானமான - பிரச்சினையாகும்.

ஆட்சிக்கு வருவதற்காக - அதிகாரத்தைப் கைப்பற்றுவதற்காக - அவர் என்னவும் செய்வார் என்பது எதிர்பார்க்கப்படுவதே. அதுவே அவரது இயல்பு என்பதும் வெளிப்படையானது.

தற்போது நாட்டில் ஆட்சியிலிருப்போர் இணக்க முயற்சிகள் மூலம் பிணக்குக்குத் தீர்வு காண்பார்களே ஆயின் ஆட்சி அதிகாரத்தை மீளக் கைப்பற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் கனவு நிரந்தரமாகவே அடிபட்டுப் போகும். இருக்கும் ஆட்சிப் பீடத்தை அசைப்பதே அவருக்கு இயலாத காரியமாகிவிடும்.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு - தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இருதரப்பினர்களுக்கும் - நீதி செய்யும் விதத்தில் நியாயமான, நின்று நிலைக்கக் கூடிய தீர்வு ஒன்றைத் தற்போதைய அரசு முன்னெடுக்குமாயின், அல்லது அதில் வெற்றியை நோக்கி அது நகருமாயின், மஹிந்தவின் அரசியல் எதிர்காலம் அந்தகாரமாகிவிடும்.

அது, மஹிந்தவுக்குத் தெளிவாகத் தெரியும்.

தென்னிலங்கை இயல்பாகவே பௌத்த, சிங்கள மேலாதிக்க பேரினவாதத்தில் ஊறி, அந்த வெறியில் திளைத்து நிற்கின்றது. அந்தத் தடுமாற்ற நிலையை இலகுவாகவே உசுப்பேத்தி, இனவாத எழுச்சியை விஸ்வரூபம் கொள்ளவைத்து, அதன் வாயிலாக அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு வைத்து, அந்த முயற்சிகளில் ஈடுபட்டோரை தேசத் துரோகிகளாகக் காட்டி, அதன் மூலம் அவர்களை ஆட்சியில் இருந்து வீழ்த்தி, பதவியைத் தான் பிடிப்பதே அவரது திட்டம் - வியூகம் - உத்தி - எல்லாம் என்பது பரகசியமானவை.


இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எத்தனங்களைக் குழப்பியடிப்பதன் மூலம் மட்டுமே தனது அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைக்க முடியும் என்று திட்டமிட்டுச் செயற்படுகின்ற ஒருவரை, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைக்குமாறு கோருவதில் அர்த்தமில்லை.

அப்படித் தீர்வு முயற்சிகளைக் குழப்புவதற்கு அவர் எடுக்கக் கூடிய முயற்சிகளை முறியடிப்பதற்குத் திட்டமிட்டுச் செயற்படுவதுதான் இப்போது முக்கியமான செயற்பாடாகும்.

அது, குறித்து தீர்வு முயற்சியில் ஈடுபடுகின்ற தரப்புகள் சிரத்தையும் கவனமும் எடுத்தனவாகத் தோன்றவில்லை.

தீர்வு முயற்சிகளைக் குழப்பும் தரப்புகளின் ஊடுருவல் நல்லாட்சி அரசின் கட்டமைப்புக்குள் ஆழப் புகுந்துவிட்டது. புற்று நோய் போல நல்லாட்சி அரசை அது அரித்து அழித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய தீர்வு எதிர்ப்பு தொற்றுக் கிருமிகளின் பரவலைக் கட்டுப்படுத்த நல்லாட்சி அரசு தவறு மானால், ஆட்சிக் கட்டமைப்பையே அது விரைவில் சிதறடித்து விடுவதற்கான அத்திபாரமாகி விடும் என்பது திண்ணம்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படுவது ஒன்றே தங்களின் இலக்கு எனக் கருமமாற்றும் தரப்புகளுக்கு சமரச சமிக்ஞை அனுப்புவதை விடுத்து, தீர்வு முயற்சிகளில் ஆக்கபூர்வமான - திட்டவட்டமான - கட்டுறுதியான - தெளிவான - நடவடிக்கைகளை எடுத்து முன்நகர்வதே இன்று முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடும், தேவையுமாகும்.




# ஏப்ரல் முதல் கட்டாயமாகின்றது தரமான தலைக்கவசப் பயன்பாடு

கொழும்பு, பெப்.03

தரமான தலைக்கவசங்களின் பயன்பாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து மற்றும் சிவில் சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

இதற்கு உதவி வழங்குவதற்காக, நுகர்வோர் அதிகார சபையும் இலங்கை நியமங்கள் நிறுவனமும் முன்வந்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் பாதிக்கப்பட்டு, அங்கவீனமுற்ற மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கும் நிகழ்வு அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விபத்தொன்றை ஏற்படுத்திய நபர் இனங்காணப்படவில்லையாயின், அந்த விபத்தால் பாதிக்கப்பட்ட நபர், ஆதரவற்றவராகி விடுகின்றார். இவ்வாறாக இனங்காணப்படாதவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, 2008ஆம் ஆண்டு தொடக்கம், நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம், 137 பேருக்கு 7.6 மில்லியன் ரூபாவும் 165 குடும்பங்களுக்கு 11.5 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிகழ்வில், 18 பேருக்கு 1.8 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதோடு, ஒரு குடும்பத்துக்கு 2.3 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டது.

இதேவேளை, பாதுகாப்பு வலையமைப்புகள் தவறாக அமைந்துள்ளமையும் வீதியை நேர்த்தியான முறையில் பராமரிக்க முடியாமையும், வீதி விபத்துகள் ஏற்படுவதற்குக் காரணம்.

மேலும், இருக்கைப் பட்டிகளை அணியாமல் வாகனம் செலுத்துதல், தரமற்ற தலைக்கவசங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. - என்றார். (எ)

# தமிழ் மக்களை மீண்டும் ஓர் போராட்டத்துக்குள் தள்ளக்கூடாது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் தெரிவிப்பு



தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் மக்கள் மீண்டுமொரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பேண் தகு யுகத்தின் மூன்றாண்டு உதயம் தேசிய திட்டத்தின் கிழக்கு மாகாண மக்கள் சந்திப்பின் ஒரு பகுதியாக ஏறாவூரில் நடைபெற்ற விசேட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்கள் தங்களது அரசியல் உரிமைகளை யாப்பு ரீதியாகப் பெற்றுக்கொள்வதற்காகவே அரசுக்கு ஆதரவளித்தனர்.

அபிவிருத்தியை மாத்திரம் இலக்காகக் கொண்டு, தமிழ் மக்கள் நல்லாட்சி அரசுக்கு வாக்களிக்கவில்லை.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப் படுத்த வேண்டியது, நல்லாட்சி அரசின் கடமை.

தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் மக்கள் மீண்டுமொரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படக்கூடாது - என்றும் அவர் வலியுறுத்தினார். (எ)

# சத்திரசிகிச்சைக்குரிய பொருள்கள் கொள்வனவுக்கு அனுமதி

சத்திர சிகிச்சைக்கு அவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்னவால் முன் வைக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்கு அவசியமான நுகர்வுப் பொருள்களை பல்வேறு அளவுகளில் கொள்வனவு செய்வதற்கான் ஒப்பந்தத்துக்கு அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் -

கொள்முதல் குழுவின் விதப்புரையின் அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சர் ராஜிதவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.(எ)


டெங்கு நோயை இல்லாது ஒழிப்போம்.
* உடலை நன்றாக மூடும்படியான ஆடைகளை அணிவோம்.
* நுளம்பு விரட்டிகளை பாவிப்போம்.
* டெங்கு நோய் என சந்தேகிக்கும் நோயாளிகளை, நுளம்பு வலைகளின் கீழ் ஓய்வெடுக்கச் செய்வோம்.
"வளமாக வாழ்வோம்"
தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ்ப்பாணம்

## நாளை

04.02.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : பரணி மா. 6.17 வரை
திதி : அட்டமி மு.இ. 8.17 வரை
சுபநேரம் : 3.35 – 5.05 வரை
இராகுகாலம் : 9.35 – 11.05 வரை

# கும்பாபிஷேகம்



தெல்லிப்பழை, பெப்.03

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தென்னிந்திய சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ள தென்திசை வாயில் கோபுரம் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி தைப் பூசத் தினத்தன்று காலை 9.30- 10.30 மணி வரையான சுபநேரத்தில் இடம் பெறவுள்ளது. (ஐ-10)

# ட்ரம்பின் குடிவரவுத் தடையால் தடுக்கப்பட்ட இலங்கையர்!

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் சர்ச்சைக்குரிய குடிவரவுத் தடையால், நியூயோர்க் விமான நிலையத்தில் இலங்கையர்களும் தடுத்து வைக்கப்பட்டனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், ஈரான், ஈராக், சிரியா, லிபியா, சூடான், சோமாலியா, யேமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடைவிதித்துள்ளார்.

அமெரிக்க விமான நிலையங்களில், ஏனைய நாடுகளின் பயணிகள் கடுமையாகச் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் நியூயோர்க் ஜோன் எவ் கெனடி விமான நிலையத்தில், இலங்கை உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த 71 பேர் அமெரிக்காவினுள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள், தடைவிதிக்கப்படாத நாடுகளான, மலேசியா, சீனா, இலங்கை, துருக்கி, பாகிஸ்தான், பிரான்ஸ், அல்ஜீரியா, ஜோர்தான், கட்டார், செனகல், சுவிஸ், எகிப்து, கினியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதனிடையே, அமெரிக்காவுக்குள் நுழைய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துமாறு, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம், ஐ.நா. பொதுச்செயலர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க விமான நிலையத்தில் இலங்கையர் தடுக்கப்படவில்லை

### இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.03

அமெரிக்க விமான நிலையங்களில் எந்த இலங்கையரும் சிக்கிக் கொள்ளவில்லை என்று வெளிவிவகார அமைச்சு உறுதியளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தடை உத்தரவு ஒன்றை அடுத்து இலங்கை உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த 71 பேர் பாதிக் கப்பட்டிருந்தனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், அமெரிக்காவுடன் தொடர்பை ஏற்படுத்திய இலங்கை வெளிவிவகார அமைச்சு, பாதிக்கப்பட்டவர்களில் இலங்கையர் உள்ளடங்கப்படவில்லை என்று பின்னர் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஈராக், சிரியா, ஈரான்; லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் போன்ற 7 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்கும் திட்டத்தை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைக்க அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

எனவே, இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த 71 பேரில் இலங்கை, பாகிஸ்தான், பிரான்ஸ், அல்ஜீரியா, ஜோர்டான், கட்டார், செனகல், சுவிஸ் மற்றும் துருக்கி நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எவ்வாறாயினும், அமெரிக்க விமான நிலையங்களில் எந்த இலங்கையரும் தடுத்து வைக்கப்படவில்லை என்று அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சாதகமான முன்னேற்றங்கள் கண்டு வருகிறது இலங்கை

### பிரெஞ்சு ஜனாதிபதி தெரிவிப்பு

பாரிஸ், பெப்.03

இலங்கையில் சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று பிரெஞ்சு ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் மாளிகையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு பிரெஞ்சு அதிபர் புத்தாண்டு வரவேற்பு விருந்துபசாரத்தை அளித்தார்.

இதில் பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் திலக் ரணவிராஜாவும் பங்கேற்றிருந்தார்.


இதன்போது, இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில், திலக் ரணவிராஜா பிரெஞ்சு அதிபருக்கு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கும், ஜி.எஸ். பி. பிளஸ் வரிச்



சலுகையை மீளப் பெறுவதற்கும் இலங்கைக்கு பிரான்ஸ் அளித்துவரும் ஆதரவுக்கும் திலக் ரணவிராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

இதன் போது, இலங்கையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை பிரெஞ்சு அதிபர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன், அனைத்துலக சமுகத்துடன் இலங்கை மீண்டும் தொடர்புகளை வலுப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறது என்றும் பிரெஞ்சு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஐ)



சுமார் 26 வருடங்களின் பின்னர் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கடந்த காலப் போர்ச் சூழல் காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்த ஆலயத்தில் மீண்டும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திருப்பலியை அருட்தந்தை ஜெயக்குமார் மற்றும் அருட்தந்தை அன்ரனிபாலா ஆகியோர் ஒப்புக் கொடுத்தனர். (ஐ)

## ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு இன்று 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''சமயமும் வாழ்வும்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.

இச்சொற்பொழிவை சைவப்புலவர் திருமதி ஜே.சசிரேகா நிகழ்த்துவார். (ஐ-30)

# தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறை; சிரமத்தின் மத்தியில் மக்கள்

நெல்லியடி, பெப்.03

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் போதியளவு தமிழ்ப் பொலிஸார் இல்லாமையால் பொதுமக்கள் முறைப்பாடுகளைச் செய்யச் செல்கின்ற போது நேர விரயம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏழு தமிழ்ப் பொலிஸார் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த நிலையில் இருவர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

ஐந்து தமிழ்ப் பொலிஸார் தற்போது உள்ள நிலையில் அனைத்து விடயங்களையும் அவர்களே கையாள வேண்டியுள்ளது.

நீதிமன்றம், சுற்றுக்காவல், சம்பவம் ஒன்று நடைபெற்றால் அவ்விடத்துக்குச் செல்லல், விசாரணை செய்தல், முறைப்பாடுகளைப் பதிவு செய்தல் போன்ற விடயங்களை அவர்கள் ஐவருமே கவனிக்க வேண்டியுள்ளது. எனவே, மேலதிக தமிழ்ப் பொலிஸாரை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு நியமிப்பதனூடாக பொதுமக்களின் நேரவிரயத்தைத் தடுக்க முடியும் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (ஐ-40)

# சுதந்திர தின சமய நிகழ்வுகள் சுதந்திர சதுக்கத்தில் இன்று

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமய நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இன்று இரவு கொழும்பு சுதந்திர சதுக்க மண்டபத்தில் முழு நேர பிரித் பாராயணம் இடம்பெறவுள்ளது.

அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பௌத்த அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுதந்திர தினமான நாளை காலை கொழும்பு பொல்வத்த தர்மகீர்த்தியாராம விஹாரையில் பௌத்த மத அனுஷ்டானங்கள் இடம்பெறும். இதிலும் பிரதமர் விக்கிரமசிங்க, அமைச்சர் ராஜபக்ஷ ஆகியோர் அரசின் சார்பில் கலந்து கொள்வர்.

கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இந்து மத அனுஷ்டானங்கள் நடைபெறும். அமைச்சர்களான டீ.எம்.சுவாமிநாதன், பழனி திகாம்பரம், மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர்கள் வீ.ராதாகிருஷ்ணன், விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இதில் கலந்து கொள்வர்.

கொழும்பு பெரிய பள்ளி வாசலில் இஸ்லாமிய மத நிகழ்ச்சிகள் இடம்பெறும். அமைச்சர்களான அப்துல் கலீம், கபீர் ஹாசீம், ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியூதீன், பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் அதில் பங்கேற்பர்.

திம்பிரிகஸ்யாய தெரேசா தேவாலயத்தில் கத்தோலிக்க மத ஆராதனைகள் இடம்பெறும். அமைச்சர் ஜோன் அமரதுங்க அரசின் சார்பில் கலந்து கொள்வார். பொரல்ல சென். லூக்ஸ் தேவாலயத்தில் கிறிஸ்தவ ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. பிரதியமைச்சர் இரான் விக்ரமரட்ன அதில் பங்கேற்பார். (ஐ)

## வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை

வடமராட்சியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது பாவனையாளர் அதிகாரசபையினர் திடீர் நடவடிக்கைகள் மேற்கொண்டு சோதனைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி, மந்திகை, பருத்தித்துறைப் பிரதேசங்களுக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது திடீர்ப் பாய்ச்சல் மேற்கொண்ட அதிகாரிகள் வெதுப்பகங்களில் பாணின் நிறை, வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல், காலாவதியான பொருள்கள் தொடர்பில் சோதனை நடத்தினர். இதன் போது இனங்காணப்பட்ட காலாவதியான பொருள்கள் அழிக்கப்பட்டன என்று கூறப்பட்டது. (ஐ-40)

# முறக்கொட்டான்சேனை பகுதியில் மனித எச்சங்கள்: 3 மாதங்களின் பின் ஆய்வுகளுக்காக நிபுணர் குழு

ஏறாவூர்,பெப்.03

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முறக்கொட்டான் சேனை இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் அமைந் துள்ள குடியிருப்புக் காணி ஒன்றுக்குள் மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்படும் எலும் புத் துண்டுகள் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டி ருந்தன. இந்நிலையில் மூன்று மாதங்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை அந்த இடத் தில் ஆய்வுகளை மேற்கொள்ள சட்ட வைத்திய நிபுணர் குழு வருகை தந்தது.



இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வருடம் முறக்கொட் டான்சேனை பகுதியில் உள்ள குடியிருப்புக் காணி ஒன்றுக் குள் வீட்டின் உரிமையாளர் மலசல கூடம் கட்டுவதற் காகக் குழி வெட்டும்போது எலும்புத் துண்டுகள் கண்டெ டுக்கப்பட்டன. இதனை அடுத்து இந்த விடயம் தொடர் பில் ஏறாவூர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் நீதிவான், சட்ட வைத்திய அதிகாரிகள் சகிதம் அந்த இடத்தைப் பார்வை யிட்டிருந்தார். பின்னர் அங் கிருந்த சில எலும்புத் துண் டங்கள் ஆய்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந் தன. இதனை அடுத்து, மூன்று மாதங்கள் கடந்த நிலையில், மீண்டும் இந்த இடத்தை அகழ்வதற்கு மேலதிக நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இந்த எலும்புத் துண்டுகள் கடந்த காலங்களில் சித்தாண்டி சித்திர வேலாயுதர் ஆலயத் தில் வைத்து இராணுவத்தின ரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் மனித எச்சங்களாக இருக் கலாம் என இந்த இடத்தைப் பார்வையிட்ட நாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

முறக்கொட்டான்சேனைப் பகுதியில் இராணுவத்தின் படை முகாம் அமைந்துள்ள நிலையில், அந்த பகுதியில் ஒரு சிறு பகுதி பொது மக்க ளின் பாவனைக்கு விடப்பட் டுள்ளது. சுமார் 40 இற்கு மேற் பட்ட பொது மக்களின் காணி கள் மற்றும் பாடசாலை ஆகி யவற்றை இராணுவத்தினர் கைய கப்படுத்தி வைத்திருக்கின் றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தாய்ப்பால் புரைக்கேறி குழந்தை உயிரிழப்பு!



திருக்கோவில்,பெப்.03

திருக்கோவில் பிரதேசத் தில் 3 மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று தாய்ப்பால் புரைக்கேறி நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு வழமை போன்று தாய் பால் ஊட்டும் போது புரைக்கேறியது என குடும்பத்தவர்கள் தெரிவித் தனர்.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு குழந் தையைக் கொண்டு சென்ற போதிலும் ஏற்கெனவே உயி ரிழந்து விட்டது என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரி வித்தன. (ச)

## ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திக்கக் கோரிக்கை

பெரியபுல்லுமலை,பெப்.03

மட்டக்களப்பு மேற்குகல்வி வலயத்திலுள்ள பெரியபுல்லுமலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த பல வருடங்களாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் அந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியபுல்லுமலை எல்லைக் கிராமம் மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள் ளது. இந்தப் பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் பல தடவைகள் கல்வித் திணைக்களம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அறிவித்தும் இது வரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. பாடசாலையிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறைக்கு மிக விரைவில் ஒரு தீர்வை வழங்க வேண்டும் என கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர். (ச)

## மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கிழக்குப் பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, பெப்.03

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியில் கல்வி கற்று பட்டம் பெறுவோர் இலங்கை மருத்துவ சங்கத்தில் தங்களை பதிவு செய்யலாம் என மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிழக்குப் பல்க லைக்கழக மருத்துவப் பீட மாணவர்களால் மட்டக்களப் பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மருத்துவ பீட மாணவர்கள் பலர் தனி யார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந் தியவாறு கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு அரசடியில் உள்ள மருத்துவ பீடத்தின் முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மட்டக் களப்பு நகர சுற்றுவட்டம் வரை சென்று மீண்டும் மருத் துவ பீடம் வரை வந்து முடிவ டைந்தது. (ச)

## மோ. சைக்கிள் மரத்துடன் மோதி விபத்து; ஒருவர் சாவு; மற்றைய இருவர் காயம்

ஏறாவூர்,பெப்.03

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி கடற்கரை வீதியில் இளைஞர்கள் மூவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத் துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றைய இரு வரும் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 7.20 மணியள வில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏறாவூர் தளவாய் கிராமத்தைச் சேர்ந்த மகா லிங்கம் வினோத்ராஜ் (வயது - 19) என்பவரே உயிரிழந்த வர் ஆவார்.

இவர்கள் தலைக் கவச மின்றி மோட்டார் சைக்கிளில் புன்னைக்குடா வீதி வழியாக அதி வேகமாகப் பயணித் துள்ளனர். அப்போது மோட் டார் சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த பனை மரத் துடன் மோதியுள்ளது. இதன் போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்தார்.

அதில் பயணித்த மற்றைய இளைஞர்கள் இருவரும் காய மடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர். (ச)

## தொண்டர் ஆசிரியர்கள் 445 பேருக்கு கிழக்கில் நியமனத்துக்கான அனுமதி

### தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.03

கிழக்கு மாகாணத் தொண் டர் ஆசிரியர்கள் 445 பேருக்கு நியமனம் வழங்குவதற்கு மத் திய கல்வி அமைச்சிலிருந்து கிழக்கு மாகாண கல்வி அமைச் சுக்கு அனுமதி கிடைக்கப்பெற் றுள்ளது என கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத் தின் தலைவர் ஏ.எஸ்.அனீஸ் தெரிவித்தார்.

கடந்த வருடம் உண்ணா விரதம் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர், மத்திய கல்வியமைச் சர் போன்றோருடனான சந் திப்புகள், கல்வியமைச்சுக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட் டங்கள் என்பன மேற்கொண் டமையின் வெற்றியாகத்தான் 445 பேருக்கும் இந்த ஆசிரி யர் நியமனத்துக்கான அங்கீ காரம் கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## விறகு வெட்டச் சென்ற முதியவர் வாகரையில் சடலமாக மீட்பு!


மட்டக்களப்பு வாகரை பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற முதியவர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை சடல மாக மீட்கப்பட்டார்.

காயங்கேணி மாங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிரேசன் மயில் வாகனம் (வயது - 60) என்பவரே சட லமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

வியாழக்கிழமை அதிகாலை விறகு வெட்டச் சென்றிருந்த பிரஸ்தாப முதியவர் நீண்ட நேரமாக வீடு திரும்பாத நிலையில், அந்தப் பகுதிக்குச் சென்ற சிலர் வழங்கிய தக வலை அடுத்து அவரின் சட லம் மீட்கப்பட்டுள்ளது. விறகு வெட்டுவதற்காகக் கொண்டு சென்ற கோடரி ஒருபுறமும் சட லம் வேறு பகுதியிலும் கிடந் தது எனத் தெரிவிக்கப்படுகி றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

## கொக்கட்டிச்சோலை பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வு



கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயை ஒழிக்கும் முகமாக கொக்கட் டிச் சோலை பொலிஸ் நிலை யம், பிரதேச சபை மற்றும் சுகா தார வைத்திய அதிகாரி அலு வலகம் ஆகியன இணைந்து டெங்கு விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதில் ஒரு கட்டமாக கொக் கட்டிச்சோலைப் பிரதான வீதி சிரமதானம் செய்யப்பட்டது. பாடசாலை மாணவர்கள் அந் தப் பகுதியில் உள்ள வீடுக ளுக்கும் சென்று டெங்கு நுளம்பினால் ஏற்படும் பாதிப்பு குறித்துத் துண்டுப்பிரசுரங் களை விநியோகித்தனர்.

பொலிஸ் நிலைய சமுதா யப்பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.வரதராஜன் மற்றும் மகிழ டித்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (ச)

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன்!

## அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.03

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன் என்று கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் அமைச்சருக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கூட்டு எதிர்க்கட்சியினரால் எனக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவியை ராஜினாமா செய்யத் தயார்.

எந்தவிதமான சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்களிலும் நான் ஈடுபடவில்லை.

எனக்கு எதிராகலஞ்ச, ஊழல், மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் செய்த முறைப்பாடு வேறு, ஊடகங்களில் கூறிய தகவல்கள் வேறு. எனக்கு எதிராக முறைப்பாடு செய்வது யார்? மஹிந்தானந்த அளுத்கமகே.அவரைப் பற்றிய விவரங்களை அவரது மனைவியே நாட்டுக்கு அம்பலப்படுத்தியிருந்தார்.

சைக்கிளில் சென்ற மஹிந்தானந்த் எவ்வாறு கோடீஸ்வரராக மாறியுள்ளார்? அதை பற்றிய விவரங்களை அவரது மனைவி நாட்டுக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

கள்வர்களிலும் கள்வர்கள் இணைந்தே களவுகளை கண்டு பிடிக்க முயற்சிக்கின்றனர். நான் நெல் விற்பனைச் சபையில் களவெடுக்கவில்லை.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன்.எனக்கு எதிரான குற்றச்சாட்டை விரைவில் விசாரணை செய்யுமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோருகின்றேன்.- என்றும் தெரிவித்துள்ளார்.

நெல் விற்பனைச் சபையின் பணத்தை மோசடி செய்துள்ளார் என்றும் அரசாங்கத்திற்கு 360 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் ஹரிசன் மீது கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன கடற்படையின் ஆராய்ச்சிக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை!



கொழும்பு,பெப்.03

சீன கடற்படையின் கடல் ஆராய்ச்சிக்கப்பலான 'க்யோன் சன்ஹின்ங்' கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

எரிபொருள் தேவை மற்றும் தொழில்நுட்பக் காரணங்களுக்காக நேற்று முன்தினம் வருகைதந்த இந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய மரியாதை செலுத்தி வரவேற்றுள்ளனர்.

கப்பலின் கட்டளை அதிகாரி லெப்டினென்ட் கமாண்டர் யங் ஹெய்டொ மேற்கு கடற்படைக் கட்டளை தலைமையகத்தின் கட்டளை தளபதி ரியர் அட்மிரல் நிராஜ் ஆடிகலவையைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்புக் குறித்து நினைவுச் சின் னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

'க்யோன் சன்ஹின்ங்' கப்பல் எதிர்வரும் 06 திகதி வரை இலங்கையில் தரித்து நிற்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# களனி பல்கலை மாணவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தடை!

கொழும்பு,பெப்.03

கொழும்பில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதைத் தடுக்கும் வகையில், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ, விஞ்ஞானபீட மாணவர்களுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனியார் மருத்துவக் கல்லூரியின் பட்டப்படிப்பு சான்றிதழை இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கும் விதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து களனி பல்கலைக்கழக மருத்துவ, விஞ்ஞான பீட மாணவர் சங்கம் உள்ளிட்ட 15 மாணவர் சங்கங்கள் நேற்று பிற்பகல் கொழும்பின் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

பொரளை மயான பிரதேசம், லிப்டன் சுற்றுவட்டம், காலி முகத்திடல், ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை, கோட்டை ரயில் நிலையம் மற்றும் மருதானை ரயில் நிலையப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், அப்பகுதிகளில் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் கொழும்பு மேலதிக நீதிவான் ரங்க திசாநாயக்க தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த நீதிமன்ற கட்டளையை மீறும்பட்சத்தில் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்பதை பிரதிவாதிகள் தரப்பிற்கு அறிவிக்குமாறும் பொரளை பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன் பிரகாரம், நீதிமன்ற கட்டளையை மீறுவோரை கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் துவதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. (க)

# கொழும்பில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள்: வீதிகள் சிலவற்றில் வாகனங்கள் செல்லத் தடை

கொழும்பு,பெப்.03

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு, காலி முகத்திடலை சூழவுள்ள பகுதிகளில் விசேட பாதுகாப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்று அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரில் பாதுகாப்புத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின வைபவத்திற்கான ஒத்திகை இன்று நடைபெறவுள்ளதால் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தன்று அதிகாலை 5 மணி முதல் காலி முகத்திடல் சுற்றுவட்டம் முதல் பழைய நாடாளுமன்ற சுற்றுவட்டம் வரையிலும், சைத்தியா வீதியூடாகவும் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கொள்ளுப்பிட்டி சந்தியால் காலி முகத்திடல் நோக்கிப் பிரவேசிப்பதற்கும், சென். மைக்கல் வீதியால் காலி முகத்திடல் நோக்கிப் பயணிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடுன்ன சுற்றுவட்டத்தின் ஊடாக காலி வீதிக்குள் பிரவேசிப்பதற்கும் செரமிக் சந்தியூடாக பழைய நாடாளுமன்றம் நோக்கி லோட்டஸ் வீதியூடாகப் பயணிப்பதற்கும் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யோர்க் வீதியால் இலங்கை வங்கி மாவத்தைக்குள் பிரவேசிப்பதற்கும், சீனோர் சந்தியால் கோட்டை ரயில் நிலைய வீதியூடாக, மத்திய தபால் பரிமாற்று நிலைய சந்தி ஊடாக, செரமிக் சந்திக்குள் பிரவேசிப்பதற்கும் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்க்கான் மாக்கார் வீதி, உத்தரனந்த மாவத்தை சந்தியூடாக காலி முகத்திடல் சுற்றுவட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு குறிப்பிட்ட காலப் பகுதியில் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அந்த பிரதேசங்களில் உள்ளவர்கள் மற்றும் அலுவலகங்களில் தொழில் புரிவோருக்கும் மாத்திரம் விசேட அனுமதி வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 25 தமிழக மீனவர்களையும் விடுவியுங்கள்!

## த.மா.கா. தலைவர் வாசன் அறிக்கை

சென்னை,பெப்.03

இலங்கைவசம் உள்ள 25 தமிழக மீனவர்களையும், 123 படகுகளையும் உடனடியாக மீட்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகாதப்பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மீனவர்கள், 350 விசைப் படகுகளில் நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்தப் பகுதிக்கு ரோந்து சென்ற இலங்கை கடற்படையைப் பார்த்த உடனேயே தமிழக மீனவர்கள் அந்தப் பகுதியை விட்டு புறப்படத் தயாரானார்கள்.

இந்த நிலையில் இலங்கை கடற்படை 5 மீனவர்களை சிறை பிடித்து, அவர்களது ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் தொடர் அட்டகாசத்தை இலங்கை அரசு கண்டுகொள்ளாமல் இருக்கின்றது. இதனை மத்திய பா.ஜ.க. அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசும் மீன வர்கள் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இதுவரை இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட வில்லை.

ஏற்கனவே, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறையில் வாடும் 20 மீனவர்களை இன்னும் விடுவிக்கப்படாமல் இருக்கின்றனர்.

அத்துடன், தற்போது மீண்டும் 5 மீனவர்களையும் சிறைபிடித்துச் சென்றிருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை வசமுள்ள தமிழக மீனவர்களின் 122 படகுகள் திரும்ப ஒப்படைக்கப்படாமல் உள்ளன. இந்த நிலையில் தற்போது மீண்டும் ஒரு படகைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை சிறை பிடிப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் விரைவில் நிறுத்தப்பட வேண்டும். இதற்காக மத்திய பா.ஜ.க. அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு பேச்சு மூலம் நல்லதீர்வை எட்ட வேண்டும்.- என்றுள்ளது. (ஐ)







நெடுங்கேணி சேனைப்புலவு உமையாள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் லோ.விமல்ராஜ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ஐ-70)





கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 9மணிக்கு கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்றன.


நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், சிறப்பு விருந்தினராக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரனும் கலந்து கொண்டனர். (ஐ-21)







பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வைர விழாவும் நூல் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன. விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மங்கல விளக்கு ஏற்றப்படுவதையும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் 'பாலாவி' எனும் நூலை வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் அதைப் பெற்றுக் கொள்கின்றமையும் படங்களில் காணலாம். (ஐ-40)



கொடிகாமம் வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். கந்ததாசனும்,சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் வி.நடராஜாவும்,கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எஸ். துரைரட்ணமும் கலந்து கொண்டனர். (ஐ-21)








வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை அதிபர் திருமதி சே.சிறீஸ்கந்தராஜா தலைமையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும்,சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளருமான மாணிக்கவாசகர் இளம்பிறையன், தனியார் கல்வி நிலைய உரிமையாளர் அசோக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்தியக் கருவிகள் சகிதம் விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதையும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கின்றமையையும் படங்களில் காணலாம். (ஐ-21)



சி. விஜயகுமார்
சுற்றாடல்
உத்தியோகத்தர்
மத்திய சுற்றாடல்
அதிகாரசபை, வவுனியா.



நேற்று (பெப்ரவரி 2 ஆம் திகதி) உலக ஈரநில தினம்

# உயிரின இருப்புக்கு அடிப்படையான ஈரநில சூழலை பாதுகாப்போம்...!

பௌதீக, பண்பாட்டு ரீதியில் காணப்படும் உயிரின வாழ்விடத்துக்கும், இயற்கை அழகுக்கும், மனித தேவைகளை நிறைவேற்றுவதற்கும், இயற்கை அழிவுகளில் இருந்தும் இந்தப் பூமியைப் பாதுகாப்பதற்கும் அடிப்படையான ஈர நிலங்களையும் ஈர நிலங்களிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருள்களின் அபகரிப்பைத் தடுத்து, சூழல் சமநிலையையும், சூழல் பாதுகாப்பையும், இயற்கை எழிலையும் நிலை நிறுத்தும் வகையில் உலக ஈரநிலங்கள் தினம் வருடம் தோறும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி சர்வதேச ரீதியில் நினைவு கூரப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் முக்கிய தினங்கள் நினைவு கூரப்படுவதற்கான காரணம் அந்த கருப்பொருள்கள் பற்றிய பாதுகாப்பு, முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு என்பவை சர்வதேச ரீதியில் அவசியமானம் என்பதை உணர்த்துவதாகும். அந்த வகையில் தான் ஈர நிலங்கள் தினம் 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியிலிருந்து வருடம்தோறும் அனுஷ்டிக்கப்படுகிறது. ஈரநிலங்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வும், பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் மிக மிக இன்றியமையாத தற்கால சூழல் நெருக்கடியாக மாற்றம் பெற்றுள்ளமை வெளிப்படையான உண்மையாகும்.

பௌதிக ரீதியாகவோ, அல்லது மனித நடவடிக்கைகளிலோ உருவாக்கப்பட்டதும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உவர் அல்லது நன்நீரைக் கொண்டு காணப்படும் பகுதிகள் ஈர நிலம் எனக் குறிப்பிடலாம்.

ஈரநிலங்களினுடைய சூழல்சார், பொருளாதாரம் சார், சமூகம் சார்ந்த முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக ஈரநிலங்களைப் பேணும் வகையில் உலகின் பல நாடுகள் ஒன்றிணைந்து 1971 ஆம் ஆண்டில் பெப்ரவரி 02 ஆம் திகதி ஈரானின் தலைநகர் ரம்சார் நகரில் செய்து கொண்ட உடன்படிக்கை ரம்சார் சமவாயம் எனப்படும். இந்தச் சமவாயத்தில் இன்றுவரை 160 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இதில் 1987 ஆம் ஆண்டில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

## ஈரநில வரைவிலக்கணம்

ரம்சார் சமவாயத்தின் வரைவிலக்கணப்படி நீர் வற்று மட்டத்திலிருந்து 6 மீற்றருக்குக் குறைந்த கடல் பகுதியும் அடங்கலாகப் பெருக்கெடுத்துப் பாயும் அல்லது சலசலப்பின்றி இருக்கும் நன் நீர், சவர் நீர் அல்லது உவர் நீரில் தங்காலிகமாக அல்லது நிரந்தரமாக மூழ்கியிருக்கும் செயற்கையான அல்லது இயற்கையான சதுப்பு நிலங்கள், வில்லுகள், நீர்த்தேக்கங்கள், அல்லது நீர் மார்க்கங்கள், சேற்றுத் தரைகள், முற்நா நிலக்கரியுள்ள நிலங்கள் என்பன ஈர நிலங்களாகும்.

## ஈரநில வகைப்பாடு

இந்த ஈரநிலங்களின் தன்மைக்கேற்ப அவற்றை மூன்று வகையின் கீழ் குறிப்பிட முடியும். அதில் நன்நீர் ஈர நிலங்களாக உள்ளக நீர்த் தேக்கங்கள், குளங்கள், ஆறுகள், நீர்வளிந்தோடும் சமவெளிகள், வில்லுகள், நன் நீர் சதுப்பு நிலங்கள் என்பனவும் சவர் நீர் ஈரநிலங்களாக ஆற்றுக்கழிமுகங்கள், பொங்கு முகங்கள், களப்புகளும், உவர் நீர் ஈரநிலங்களாக முருகைக் கற்பாறைகள் கடல் புல் இனங்கள், உவர் சதுப்பு நிலங்கள் என்று மூன்று கூறுகளாக வகுத்து நோக்கப்படுகின்றது.

## இலங்கையின் ஈரநிலங்கள்

ஆசியாவிலேயே உயிரின பல்வகைமையில் அதி கூடிய பெறுமானம்மிக்க நாடாகக் கருதப்படும் இலங்கைத் தீவின் சிறப்பான அம்சங்களைக் கொண்ட ஈரநிலங்களாக முத்துராஜவெல, பெல்லன்வில - அத்திடிய, லுணம, கலமெட்டிய கடல் நீரேரி, யால தேசிய வன விலங்குகள் சரணாலயத்தின் ஈர நிலங்கள் இனங்காணப்பட்டன. அத்துடன் ரம்சார் சமவாயத்தின் கீழ் பிரகடனம் செய்யப்பட்ட ஈர நிலங்களாக புந்தல தேசிய வனவிலங்குகள் சரணாலயம் (1990 ஜூன் 15), ஆனவிலுந்தாவ குளத்தொகுதி (2001 ஓகஸ்ட் 3), மாதுகங்கை சூழற் தொகுதி (2003 டிசெம்பர் 11), குடும்பிகல குமண விலங்குகள் சரணாலயம். (2010 ஒக்ரோபர் 29), வங்காளை களப்பு (2010 டிசெம்பர் 07) போன்றவை இலங்கையின் சிறப்பு மிக்க ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## ஈரநிலங்களின் முக்கியத்துவம்

ஈர நிலங்கள் உணவு உற்பத்தி, மூல பொருள், கைத்தொழில், நீர், எரிபொருள், பொழுதுபோக்கு, மருத்துவம் எனும் வகையில் மனிதனது அன்றாட அத்தியாவசிய தேவை முதல் ஆடம்பரத் தேவைகள் வரையும் நிறைவேற்றுகின்றது. ஆசிய வாழ் மக்களின் பிரதான உணவான நெல்லரிசிச் சோறு மற்றும் இலங்கையின் தேசிய உணவான பாற்சோறு இவற்றுக்கான நெல் உற்பத்தியை வழங்குவதில் பிரதானமான பங்கு வகிப்பது இந்த ஈரநிலங்களாகும்.

உணவுக்கான கீரை வகைகள், கிழங்கு வகைகள், கங்குன் தண்டு வகைகள், தாமரை, நீர்முல்லி, பழங்கள், மீன் போன்ற உணவுக்கான உற்பத்தியை வழங்குகின்றது. மற்றும் மூலிகைப் பயன்பாட்டுக்கான அல்லி விதை, தாழை, கஞ்சான்தகரை, தாமரை, பொன் னாங்காணி, நீலோற்பல விதை, புந்துனர், நீர்முல்லி, சீதேவியார், செங்கழுநீர் பூண்டு போன்றவற்றையும் இந்தச் சூழல் தொகுதி வழங்குகின்றது.

கைத்தொழில், அபிவிருத்திக்குக் கட்டுமான மூலப் பொருள்களை வழங்குகின்றனவாகக் காணப்படுகின்றன. கண்கவர் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான பன், தாழை, கொன்கந்துரு, கடல் மாங்காய், போன்றவற்றுடன் கட்டடத் தேவைக்கான வெட்டு மரம், தளபாடங்களுக்கான அரிமரம், சுண்ணாம்பு உற்பத்திக்கான முருங்கைக்கல், சிமெந்து உற்பத்திக்கான களிமண் மற்றும் சுற்றுலா, கைத்தொழில் போக்குவரத்து நடவடிக்கைகள், நங்கூரத்தளங்கள், மீன்பிடிக் கைத்தொழில் நன் நீர், இறால், மீன் வளர்ப்பு, நடவடிக்கைகளுக்கும் உதவுகின்றது. போத்தலில் அடைக்கப்படும் உற்பத்திப் பொருளுக்கான மூடியாக இடைச்சி எனும் தண்டுத் தாவரமும் இச் சூழல் தொகுதியில் இருந்து கிடைக்கின்றது.

எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த ஈர நிலங்களில் இருந்து கண்டல் நில மரங்கள், சல்பீனியா, ஐக்கோனியா போன்றவை எரிபொருள் தேவையை நிவர்த்தி செய்கின்றன. இவற்றுடன் மனிதனது அனைத்துத் தேவைகளுக்கும் தேவையான நீரை வழங்குவதுடன் கைத்தொழில் மற்றும் தரைக்கீழ் நீரின்மீள் ஊட்டத்தை வழங்குகின்றது. மேலும் வெள் ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதுடன் கடல் அரிப்பையும் தடுக்கின்றது.

உயிரினங்களைப் பேணும் வகையில் நீர்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் ஈர நிலங்களை அண்டியதாகவே இடம் பெறுகின்றது. ஆழமற்ற கண்டமேடை பகுதிகளில் இந்தச் செயற்பாடுகள் அதிக சாதகமாக இடம் பெறுகின்றன. மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கும் அதுசார்ந்த உயிரினங்களுக்கும் இந்தச் சூழல் தொகுதி வாழ்விடமாக அமைகின்றது.

## ஈரநிலங்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்

ஈர நிலங்களில் காணப்படும் மீன் இனங்களைக் கட்டுப்பாடற்ற வகையிலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும், டைனமற்றைப் பயன்படுத்துவதால் ஈரநில மீன்வளம் அற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.



அதிகரித்துவரும் சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அபிவிருத்தி எனும் பெயரில் ஈரநிலங்கள் அபிவிருத்தித் தேவைகளுக்காக ஈரநில மீட்சி செய்வதன் காரணமாக ஈர நிலங்கள் அழிவடைகின்றன.

கட்டுமானத் தேவைகளுக்கான களிமண், மணல் அகழ்வுகளை மற்றும் முருகைக்கல் பாறைகளின் அகழ்வால் ஈர நில வளங்கள் அழிவுக்குள்ளாகும் நிலையில் ஈரநிலம் சார் உயிரினங்களின் வாழ்விடம் அழிக்கப்படுவதுடன் அவற்றின் இனப்பெருக்கம் மற்றும் ஈரநிலங்கள் தமது பண்பை இழக்கும் நிலை ஏற்பட்டு விடுகின்றது.

ஈரநிலங்களில் காணப்படும் தாவரங்கள் அனுமதியற்ற வகையில்- மீள் உருவாக்கம் அற்ற வகையில் நுகரப்படுவதால் அரிய பல பெறுமதிமிக்க ஈரநில தாவர வகைகள் அழிக்கப்படுகின்றன. அருகி வரும் ஆமை போன்ற பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களும் சட்ட விரோதமாக - வியாபார நோக்கில் அழிக்கப்படுகின்றன.

மக்கள் தொகைக்கான உணவு உற்பத்தியை வழங்கும் வகையிலும் அதிக உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் ஈரநில பயிர்ச்செய்கையின் போது அதிகளவு இரசாயன வளமாக்கிகளையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்துவதால் ஈர நிலங்கள் தமது இயல்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ஈரநில பாதுகாப்பு நடவடிக்கைகள்

இலங்கையின் ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்ட அமுலாக்கங்கள் ஊடாக ஈரநிலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஈரநிலப் பிரதேசங்களை அல்லது ஈரநிலங்களை அண்டிய பகுதிகளில் பெரியளவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போது அவற்றை ஒரு முக்கிய சூழல் பாதுகாப்பு பகுதியாகக் கருதி அவற்றில் ஏற்படும் சூழல் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக ''சுற்றாடல் தாக்க மதிப்பீடு'' மேற்கொள்ளப்படுகின்றது. இதனூடாக ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

## தற்கால நிலைமை

இன்றைய நிலையில் இலங்கையின் உணவு உற்பத்தியில் நெல் மிகமுக்கிய பிரதான பயிர்ச்செய்கையாக அமைந்துள்ளதுடன், முழு அளவிலான உற்பத்தியும் இந்த ஈரநிலப் பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றன. குறிப்பாக நன்நீர் உள்ளக நீர்த்தேக்கங்கள், நதிகளின் நீர் வளத்தை அடிப்படையாகக் கொண்டு நெல் உற்பத்தி இடம் பெறுகின்றது. ஆயினும் நன்நீர்த் தேக்கங்களை நகரமயமாக்கல், அபிவிருத்தித் தேவைகள், கழிவுகளை முறையற்ற வகையில் கொட்டுதல் மூலமாக இவற்றின் பயன்பாடும் தரம் குறைந்து வருகின்றது.

16 ஆம் பக்கம் பார்க்க...




பொன்.வேணு கிருஷ்ணா

### குடியேற்றம் தொடர்பான பொருளாதாரம்

புலம்பெயர்பவர்கள் அல்லாத விசாவுக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும், புலம் பெயர்வதற்காகத்தான் விண்ணப்பிக்கிறார்கள் என்று அமெரிக்காவின் விசா சட்டம் அனுமானிக்கிறது.

இந்த அனுமானத்தை போக்கும் வகையில், ஒரு விண்ணப்பதாரர் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே ஒரு குறிப்பிட்ட தேவைக்காக மட்டுமே அனுமதி கோருகிறார் எனவும், அதே கருத்தை நிரூபிக்க ஆதாரத்துடன், தங்களது நாட்டுக்குத் திரும்பும் எண்ணத்துடன் இருக்கிறார் எனவும் நிரூபிக்க வேண்டும்.



அமெரிக்காவின் விசா சட்டம் சொல்லும் அனுமானத்தை விண்ணப்பதாரர் முறியடிக்கும் விதத்தைப் பொறுத்துத்தான் அவருக்கான ஒப்புதல் தரும் விதமும் அமைந்திருக்கும்.

அதனால், விண்ணப்பதாரரின் தாய் நாட்டில் உள்ள பொருளாதார நிலையை பொறுத்தும் விசா மறுக்கப்படுவதற்கான காரணம் அமையும். நீங்கள் வளமான நாட்டில் இருந்து வருபவரானால், நீங்கள் சுற்றுலா விசாவைக் கொண்டு புலம்பெயர்வதற்கான வாய்ப்பு குறைவு என்று எடுத்துக்கொள்ளப்படும்.

இது அஜர்பைஜான் நாட்டு விண்ணப்பதாரர்கள் ஏன் ஜோர்ஜியா நாட்டினரை விடக் குறைவான அளவிலேயே நிராகரிக்கப்படுகிறார்கள் என்பதை விளக்கும். அஜர்பைஜான் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதம் ஜோர்ஜியா நாட்டை விட 70 சதவீதம் அதிகம்.

ஆனால், 2016 இல் எல் சல்வடோரை சேர்ந்த 57 சதவீத விண்ணப்பதாரர்களுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது; ஆனால், வெறும் ஏழு சதவீத பராகுவே நாட்டைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே விசா மறுக்கப்பட்டுள்ளமை ஏன்? இந்த இரண்டு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானது தானே?

### பிணைக்கும் உறவுகள்

பொருளாதார சூழ்நிலையோடு, கூடுதலாக விண்ணப்பதாரர் குடியேறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா, இல்லையா என்பதையும் விசா அதிகாரி கருத்தில் கொள்கிறார்.

அமெரிக்காவில் உள்ள ஆவணமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடியேறி சமூகங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்பது இந்த முடிவை எடுப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு அலுவலகம் மதிப்பீடுகளின்படி, 2009 இல் அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களில் மொத்த எண்ணிக்கையில், ஐந்து சதவீதத்தினர் எல் சல்வடோரில் இருந்து வந்துள்ளனர். ஆனால், அது போன்ற பராகுவே நாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கை ஒரு சதவீதத்துக்கும் குறைவு.

ஒருவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது அவரின் விசாவை நிர்ணயிக்கும் ஒரு காரணியாக இருக்குமா என்று கேட்டபோது, தூதரக அதிகாரிகள் தாங்களுக்குக் கிடைக்கும் அனைத்துத் தகவல்களையும் ஆய்வு செய்யப் பயிற்சி அளிக்கப்படுகிறது என காக்ஸ் பதில் அளித்தார்.

### புள்ளிவிவரக் கணக்குகள் கூறும் எச்சரிக்கைக் கதை

2016 புள்ளி விவரங்களில் மற்றெந்த விவரங்களைக் காட்டிலும் மற்றொரு புள்ளிவிவரம் தனித்துத் தெரிகிறது. வாடிகன் நகரத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களில் 62.5 சதவீத பேருக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் சுற்றுலா அல்லது தொழில் தொடர்பான விசாவைவைத்து அமெரிக்காவில் குடியேறமுயலமாட்டார்கள்.

உதாரணத்துக்கு, விசா தள்ளுபடித் திட்ட நாடுகளில் இருந்து வரும் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் குற்றங்களில் ஈடுபட்டிருந்தால், அவர்களுக்கு விசா தள்ளு படி திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டார்கள், அவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய தேவை உள்ளது என்று காக்ஸ் விவரித்தார்.

இந்த விண்ணப்பம் பின்னர் மறுக்கப்படும். இதனால்தான், விசா தள்ளுபடி திட்டத்தில் உள்ள ஒரு நாடாக வாட்டிகன் இருந்தாலும் விசா மறுக்கப்பட்ட விகிதம் அதிகமாக உள்ளது. ஆனால், ஒரு மிகச் சிறிய அளவில் விசா விண்ணப்பதாரர்கள் வெற்றி பெறவில்லை என்பதால் இந்த விகிதம் பெரிய எண்ணிக்கையாகத் தெரிகிறது.

இந்த எண்ணிக்கை குறித்த அடுத்த கேள்வியான, வத்திக்கான் நகரத்தில் இருந்து வந்த 62.5 சதவீத விண்ணப்பதாரர்கள் குற்றபின்னணி கொண்டவர்களாக இருந்தனரா என்று கேட்டபோது, இந்த தனிப்பட்ட விஷயத்தில் கருத்துத் தெரிவிக்க முடியவில்லை என்று கூறிய காக்ஸ், சிறிய மாதிரிகளை ( சாம்பிள்) வைத்து முடிவுக்கு வருவதில் உள்ள அபாயங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தார். வத்திக்கான் நகரத்தை சேர்ந்த 7.7 சதவீத விண்ணப்டதாரர்களுக்கு (13 நபர்களில் ஒருவர்)மட்டும்தான் 2014 இல் தொழில் மற்றும் சுற்றுலா விசா கோரியபோது நிராகரிப்பட்டது என்று குறிப்பிட்டார்.

### தெற்கு ஆசியா நாடுகளின் விண்ணப்பதாரர்களுக்கு, விசா மறுப்பு ஏன்?

தெற்கு ஆசிய நாடுகளில் இருந்து வந்த விண்ணப்பதாரர்களுக்கு, விசா மறுப்பு என்பது பரந்தளவில் வெவ்வேறு விகிதங்களில் வேறுபடுகிறது

அமெரிக்கா நிராகரித்த விசாக்களில், 2016ல் இந்தியாவைச் சேர்ந்த 26 சதவீத பி விசா (B) விண்ணப்பதாரர்களுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது, ஆனால், 46 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள், சுமார் 63 சதவீத விண்ணப்பதாரர்கள் பங்களாதேஷை சேர்ந்தவர்கள்.

ஆனால், ஆசிய நாடுகளில் விசா எடுப்பதில் அதிக சிரமத்தைச் சந்திக்கும் நாடு பூட்டான் ஆகும். சுமார் 70 சதவீத விசாக்கள் நிராகரிப்படுகின்றன.

பூட்டானுக்குப் பயணம் செல்வது என்பதே அதிகமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இது ஒருவேளை பரஸ்பர பதிலடி நடவடிக்கையாக இருக்கலாம்.

### பதில் சட்ட மா அதிபரை பதவியிலிருந்து நீக்கினார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் 7 முஸ்லிம் நாடுகள் மற்றும் அகதிகள் தொடர்பில் வெளியிட்ட குடியேற்றத் தடை உத்தரவை ஏற்க மறுத்த பதில் சட்ட மா அதிபரை பதவியிலிருந்து நீக்குகிறார் என அவர் அறிவித்துவிட்டார். செல்லி யேட்ஸ் எனும் பிரதி சட்ட மா அதிபரே இவ்வாறு பதவி விலக்கப்பட்டுள்ளார்.

ட்ரம்பால் அறிவிக்கப்பட்ட குடியேற்றத்தடை உத்தரவு தொடர்பான வழக்குகளில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வாதாட வேண்டாம் என அரச வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டு ஒரு சில மணி நேரங்களுக்குள், அவர் பதவியிலிருந்து


செல்லி யேட்ஸ், டானா பொயண்டே

நீக்கப்பட்டுவிட்டார்.

பதில் சட்ட மா அதிபராகக் கடமையாற்றி வந்த செல்லி யேட்ஸ், இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமையோடு, அவருக்கு பதிலாக வேர்ஜீனியா கிழக்கு மாவட்டத்தின் வழக்கறிஞராகப் பணியாற்றிவரும் டானா பொயண்டே என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி செயலகம் (வெள்ளை மாளிகை) விடுத்துள்ள அறிக்கையில் அமெரிக்க மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிராக செயற்பட்டதன் மூலம் செல்லி யேட்ஸ் நீதித்துறைக்கு துரோகமிழைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பால் பிறப்பிக்கப்பட்ட, 07 முஸ்லிம் நாடுகளின் பிரஜைகள், அமெரிக்காவுக்கு வருகின்றமைக்கு விதிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய தற்காலிகத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அமெரிக்காவில் மாத்திரமன்றி பல்வேறு வெளிநாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவின் சட்டபூர்வத் தன்மை குறித்து தனக்குத் திருப்தியில்லை என யேட்ஸ் ஒரு கடிதத்தில் கூறியிருந்தார் என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், பதில் சட்ட மா அதிபர் பதவியில் நான் இருக்கும் வரை, குறித்த ஆணையை (ட்ரம்பின் தடை உத்தரவை) நியாயப்படுத்தி எனது திணைக்களம், நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைக்காது என்று அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

தற்போது பதவி விலக்கப்பட்ட யேட்ஸ், ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட ஒருவர் என்பதோடு, அதற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட போயண்டேவும் பராக் ஒபாமா ஆட்சியில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆயினும், அந்த நியமனம் இன்னும் செனட்டால்31.01.2017 வரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, ட்ரம்ப்பின் உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் வெடித்துள்ள போராட்டங்கள் குறித்து தான் மகிழ்ச்சி அடைகிறார் என ஒபாமா தெரிவித்துள்ளார்.

தம்மால் தேர்ந்தெடுக்கப்படுவோர், தங்கள் கருத்துகளைக் கேட்க வேண்டும். அவ்வாறில்லையெனின், குடிமக்கள் தங்கள் கொண்டுள்ள அதற்கு எதிராகப் போராடும் உரிமையை,



அமெரிக்க விழுமியங்கள் நெருக்கடிக்குள்ளாகும்போது பயன்படுத்த வேண்டும் என்பதே நாம் எதிர்பார்க்கின்றோம், என்று ஒபாமா தனது கருத்தை வெளியிட்டுள்ளார். ஆயினும், அவர் இக்கருத்தில் ட்ரம்பை மறைமுகமாக சாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




46

## இந்திய – இலங்கை ஒப்பந்தம்

டில்லி விமான நிலையத்திலிருந்து தலைநகரின் மையத்தில் அமைந்திருக்கும் அசோக் விடுதிக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். புதுடில்லியில் பிரபல்யமான இந்த விடுதியின் வளாகத்தினுள் எமது வாகனங்கள் நுழைந்தபோது, பெருந்தொகையான 'கரும்பூனைகள்' என்றழைக்கப்படும் இந்திய அதிரடிப் படையினர் விடுதியைச் சூழ நிலையெடுத்து நின்றமையை நாம் அவதானித்தோம். எமது முகங்களில் வியப்பும் சந்தேகமும் எழுவதைக் கண்ணுற்ற பூரி, எமக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே விடுதிக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பிரபாகரனின் ஏளனப் புன்னகையிலிருந்து அவர் பூரியின் கூற்றை நம்பவில்லை என்பது எனக்குப் புலனாகியது. பல மாடிக் கட்டடங்களைக் கொண்ட அந்த விடுதியின் உயர்மாடியும் விசாலமான சந்திப்பு அறையும் எமக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. எமது அறைகளுக்கு முன்பாக 'கரும்பூனைகள்' ஆயுதபாணிகளாக நிலையெடுத்து நின்றனர். நாம் உயர்மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுது அங்கு ஒரு 'றோ' புலனாய்வு அதிகாரி எம்மைச் சந்தித்தார். நாம் பாதுகாப்பான தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்றும், விடுதி மாடியிலிருந்து நாம் வெளியே செல்லமுடியாது என்றும், வெளியிலிருந்தும் எம்மைச் சந்திக்க எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் சொன்னார். எமது மாடியிலுள்ள தொலைபேசிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். 'பாதுகாப்பான தடுப்புக் காவல்' என்ற பெயரில், வெளியுலகத்துடன் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் நாம் அந்த விடுதி மாடியில் சிறை வைக்கப்பட்டிருக்கிறோம் என்ற கசப்பான உண்மை எமக்குப் புலனாகியது. ''பாலா அண்ணா, நான் மீண்டும் பொறியில் மாட்டிக் கொண்டேன்'' என ஆதங்கத்துடன் சொன்னார் பிரபாகரன். நாம் இந்த விடுதிக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் டிக்சிட் அங்கு வருகை தந்தார். ஏதோ பாரதூரமான விடயத்தைச் சொல்லப் போகின்றமை போன்று அவரது முகபாவம் கடுகடுப்பாகத் தோற்றமளித்தது. அந்த விசாலமான சந்திப்பு அறையில், ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு, தனது சுங்கானை எடுத்துப் பற்ற வைத்து இரு தடவைகள் புகையை உள்வாங்கி ஊதினார். அவருக்கு முன்பாக அமைதியுடன் ஆழ்ந்த கவனத்துடன் நாம் அமர்ந்திருந்தோம். எம்மை உன்னிப்பாகப் பார்த்தபடியே தனது மௌனத்தை முறித்தார் டிக்சிட். ''இந்திய, இலங்கை அரசுகளுக்கு மத்தியில் இருதலைப் பட்சமான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விரைவில் கொழும்புக்கு விஜயம் செய்து இந்த உடன்பாட்டில் கைச்சாத்திடுவார். தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கி இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றார் டிக்சிட். தனது அங்கிக்குள் கைவிட்டு, ஓர் ஆவணத்தை வெளியே எடுத்து என்னிடம் கையளித்தார். ''தயவு செய்து இதனை மொழிபெயர்த்து, இதன் உள்ளகத்தை பிரபாகரனுக்கு விளங்கப் படுத்துங்கள் இரண்டு மணிநேரம் கழித்த பின் நான் திரும்பி வருவேன். அப்பொழுது நீங்கள் நல்லதொரு முடிவுடன் இருப்பீர்கள் என நம்புகிறேன்'' என்று கூறிவிட்டு, திடீரென எழுந்து அந்த அறையிலிருந்து வெளியேறினார் டிக்சிட். நான் அந்த ஆவணத்தை மொழிபெயர்த்துக் கூறியதுடன் அந்தத் தீர்வு யோசனையிலுள்ள சிக்கலான பரிமாணங்களையும் பிரபாகரனுக்கு விளக்கினேன். ஒப்பந்தத்தில் அடங்கியிருந்த தீர்வுத்திட்டம் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் வரையறுக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்ட இந்த யோசனைகள் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையவில்லை. 'சிறிலங்கா மக்கள் சமூகம் பல்லினக் கட்டமைப்பைக்' கொண்டதாகச் சித்திரிக்கும் இத்திட்டம், இந்நாட்டில் மொழி, பண்பாட்டு ரீதியான பல இனக் குழுமங்கள் வாழ்ந்து வருகின்றன எனக் கூறுகிறது. இப்படியான சமூகப் பார்வை தேசம், தேசிய இனம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்துள்ளது. இலங்கைத் தீவின் இறையாண்மை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியனவற்றை வலியுறுத்திய இந்த உடன்பாடு, நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பின் அடிப்படையில் தமிழரின் இனச்சிக்கலுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்தது. 'வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வதிவிடம்' என ஒரு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளமையை மட்டும் ஓர் ஆக்கபூர்வமான அம்சமாகச் சொல்லலாம். ஒரு தனித்துவமான நிர்வாக அலகாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது, இத்தீர்வுத் திட்டத்தின் மிக முக்கிய அம்சமாகக் கொள்ளலாம். ஆயினும், இந்த இணைப்புத் தற்காலிகமானதாக உள்ளது. கிழக்கு மாகாணத்தில் வதியும் எல்லா இன மக்களதும் கருத்து வாக்களிப்பு அங்கீகாரத்துடனேயே கிழக்கு மாகாணம் வடக்குடன் நிரந்தரமாக இணைக்கப்படலாம் என்ற ஒரு விதியும் இந்த ஒப்பந்தத்தில் உண்டு. ஒரு தற்காலிக வடக்கு, கிழக்கு மாகாணசபையை உருவாக்குவதற்கும் இது வழிவகுக்கிறது. ஓர் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை ஆகியோரடங்கிய நிர்வாக அமைப்பையும் இது சிபாரிசு செய்கிறது. ஆயினும், நிர்வாகக் கட்டமைப்பின் அதிகாரங்கள், செயற்பாடுகள் பற்றித்

> *'பாதுகாப்பான தடுப்புக் காவல்' என்ற பெயரில், வெளியுலகத்துடன் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் நாம் அந்த விடுதி மாடியில் சிறை வைக்கப்பட்டிருக்கிறோம் என்ற கசப்பான உண்மை எமக்குப் புலனாகியது. ''பாலா அண்ணா, நான் மீண்டும் பொறியில் மாட்டிக் கொண்டேன்'' என ஆதங்கத்துடன் சொன்னார் பிரபாகரன்.*



தெளிவாக வரையறுக்கப்படவில்லை. 1986 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் நாளிலிருந்து 1986 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் நாள் வரை இந்திய – இலங்கை அரச பிரதிநிதிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும் மத்தியில் கலந்துரையாடப்பட்ட யோசனைகளின் அடிப்படையில்இறுதித் தீர்வு வகுக்கப்படலாமெனவும் இந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் பார்க்கப்போனால், தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகள் எதற்குமே தீர்வாக இத்திட்ட யோசனைகள் அமையவில்லை. இந்தத் திட்டத்தில் ஆயுதக் களைவு பற்றி வலியுறுத்தப்பட்டமையே எமக்குப் பாரதூரமான விடயமாகத் தோன்றியது. இந்த உடன்பாடு கைச்சாத்தாகி 72 மணி நேரத்துக்குள் தமிழ் விடுதலை அமைப்புக்கள் அனைத்தும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனக் கண்டிப்பாக விதிக்கப்பட்டிருந்தது. இந்த விதியை நான் மொழிபெயர்த்துக் கூறிய பொழுது பிரபாகரனின் முகம் கோபத்தால் சிவந்தது. இந்த உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் பரிசீலனை செய்வதற்கு எமக்கு வழங்கப்பட்ட இரு மணி நேர கால அவகாசத்தினுள் பிரபாகரன் ஒரு தீர்க்கமான – உறுதியான – முடிவை எடுத்தார். எப்படியான சூழ்நிலையிலும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதில்லை என அவர் உறுதிபடத் தீர்மானித்தார். இரண்டு மணி நேரத்தின் பின்னர் டிக்சிட் எம்மைச் சந்தித்தார். இந்திய – இலங்கை உடன்பாடு சம்பந்தமாக எமது முடிவு என்னவென விசாரித்தார். இந்த உடன்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என நாம் திட்டவட்டமாக எடுத்துக் கூறினோம். எமது தீர்மானத்துக்கு விளக்கம் கேட்டார் டிக்சிட். உடன்பாட்டில் அடங்கியுள்ள தீர்வுத் திட்டத்திலுள்ள குறைபாடுகளை விளக்கிக் கூறிய நான், இத் தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் எதையுமே நிறைவுசெய்யவில்லை என்றேன். ஆகவே, இந்தத் தீர்வு யோசனைகளை எமது விடுதலை இயக்கம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றேன். எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு, நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு முன்னராக, தமிழரின் சுதந்திர இயக்கத்தை நிராயுத பாணியாக்க இந்திய அரசு வற்புறுத்துவது அநீதியானது; நியாயமற்றது என வாதாடினார் பிரபாகரன். ''கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ தியாகங்களைப் புரிந்து, இரத்தம் சிந்திப் போராடி, எதிரிப் படைகளிடமிருந்து பறித்தெடுத்த ஆயுதங்களை எழுபத்திரண்டு மணிநேரத்தில் சரணடையச் செய்யுமாறு இந்திய அரசு எவ்வாறு கோரலாம்'' என்று கேள்வி எழுப்பினார் பிரபாகரன். அவரது கனத்த தொனியில் ஆத்திரம் நிறைந்திருந்தது. எமது கண்டன விமர்சனங்களைச் செல்லுபடியாகாது எனத் தூக்கியெறிந்து விவாதித்த டிக்சிட், தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதை விடக் கூடுதலான அதிகாரங் கள் மாகாண சபைத் திட்டத்தில் இருக் கின்றன எனத் தெரிவித் தார். ஒரு நிரந்தரமான போர் நிறுத்தம் நடைமுறைக்கு வர இருப்பதாலும், இந்திய அமைதி காக்கும் படைகள் சமாதானத்தைப் பேண இருப்பதாலும் தமிழர்களுக்கு ஆயுதங்கள் அவசியமில்லை எனக் கூறினார் டிக்சிட். இந்திய அரசு மீது நம்பிக்கை வைக்குமாறு எம்மைக் கேட்டுக் கொண்ட அவர், எமது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டினார். நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறோம். ஜெயவர்த்தனா அரசு மீதும், அரச ஆயுதப் படைகள் மீதும் எமக்கு அறவே நம்பிக்கை இல்லை என்பதை இடித்துச் சொன்னோம்.

(தொடரும்...)

# பயணிகள் போக்குவரத்து பஸ்களின் சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரம் கட்டாயம்

கொழும்பு, பெப்.03

பயணிகள் போக்குவரத்து பஸ்களில் சாரதிகளாக உள்ளவர்கள் பயணிகள் தொடர்பாகப் போக்குவரத்துத் திணைகளத்தால் பயிற்சியின் பின் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது எனவும் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சட்டம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் இவ்வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இரு தினங்கள் கொண்ட பயிற்சியை இது வரை முடித்துக் கொண்ட 17 ஆயிரம் சாரதிகள் உள்ளனர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 03.02.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு தைத்திங்கள் 21ஆம் நாள் சப்தமி இரவு 10.50 வரை. பின் அஷ்டமி. அசுவினி இரவு 8.01 வரை. பின்பரணி. அமிர்த சித்தயோகம் முழுவதும் ராகுகாலம். பகல் 10.56 முதல் 12.23 வரை. சுபநேரம்: காலை 6.35 முதல் 8.03 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத வளர்பிறை ஸப்தமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வெளியூரில் பணியாற்றியவர்கள் சொந்த ஊருக்கு மாற்றலாகி வரும் சூழ்நிலை உருவாகும். நீண்டகாலக் கடன்கள் அடைபடும்.

**ரிஷபம்:** இன்று யோசனையான நாள். தனவரவு குறையும். உத்தியோகத்தர்கள் உயர்அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாவார்கள். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். வியாபாரத்தில் தேக்கநிலை காணப்படும்.

**மிதுனம்:** இன்று மகிழ்ச்சியான நாள். பணவரவு அதிகரிக்கும். நிலுவையிலிருந்த பணம் வசூலாகும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உயர்பதவி, சம்பள உயர்வு என்பன கிடைக்கும்.

**கடகம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழிலாளர்கள் வேலையில் தடங்கலும் வேலையைச் சரியாகச் செய்யமுடியாமலும் போகும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது.

**சிம்மம்:** இன்று மேன்மையான நாள். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். புதிய கௌரவப் பணிகள் வந்துசேரும். வெளிநாட்டுப் பணம் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**கன்னி:** இன்று கவலையான நாள். வருமானம் குறையும். தேகசுகம் பாதிப்புறும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். சுயதொழில் சுமாராக நடக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. யாருக்கும் பிணை செல்வதைத்தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** இன்று ஆக்கபூர்வமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். செய்யும் தொழிலில் இவர்களின் உழைப்புக்கு நல்ல பலன் கிட்டும். மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறுவார்கள். இவர்களின் முயற்சிக்கு நல்ல பலன் கிட்டும்.

**தனுசு:** இன்று நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். வியாபாரிகளின் முயற்சிகளுக்கு வெற்றியும், தொழிலில் போட்டியின்மையும் உண்டாகும்.

**மகரம்:** இன்று யோசனையான நாள். வருமானம் குறையும். வியாபாரத்தில் இதுவரை விசுவாசமாக இருந்தவர்கள் துரோகம் செய்வதால் மனவெறுப்பு உண்டாகும். உழைப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் வரும். சிலருக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். மாணவர்களுக்குக் கல்வியில் தடுமாற்றம் உண்டாகும்.

**மீனம்:** இன்று கீர்த்தியான நாள். எடுக்கும் முயற்சிகள் வெற்றிதரும். வேலை செய்யும் பெண்களுக்குத் திறமையால் பாராட்டும், பரிசும் கிடைக்கும். கலைஞர்களுக்குத் தேசிய விருதுகள் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம்

## மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில்



கொழும்பு, பெப்.03

இலங்கை மத்திய வங்கியில் பிணை முறிகள் விற்பனையில் இடம்பெற்ற மோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி கொழும்பிலுள்ள லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உள்ளிட்ட சில அமைப்புக்கள் இணைந்து முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தலைமை தாங்கினார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக நீதியான விசாரணைகளை முன்னெடுக்கும்படி வலியுத்தும் கோரிக்கைக் கடிதம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உள்ளிட்ட குழுவினர் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் கையளிப்பதற்காகச் சென்றனர்.

எனினும், பிரதான நுழைவாயிலைக் கடந்து உள்ளே செல்வதற்குப் பொலிஸார் தடை ஏற்படுத்தியமையால் கடிதத்தை ஆணைக் குழுவின் உதவி அதிகாரிகளிடம் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முன்பாக அமைதியான முறையில் கவனவீர்ப்பு போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டனர். இந்தப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர -

இலங்கை மத்திய வங்கி பிணை, முறி விற்பனையில் ஏற்பட்ட மோசடிக்கு நீதி யான விசாரணை கோரி கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்குச் சென்று கோரிக்கைக் கடிதம் ஒன்றை வழங்க இருந்தோம்.

எனினும் அந்தக் கடிதத்தை ஏற்பதற்கு ஆணைக்குழுவில் எவரும் இருக்கவில்லை. ஆணைக்குழுத் தலைவருடன் தொலைபேசியில் உரையாடிய போது கடிதத்தை அலுவலகத்தில் வழங்குமாறு கோரிய போதிலும் அங்கும் எவரும் இருக்கவில்லை. எனவே உதவி உத்தியோகத்தரிடம் கையளித்து விட்டுச்சென்றோம். எனினும் இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த மோசடியில் ஏற்பட்ட நட்டம் 14 ஆயிரம் கோடி ரூபா. இவ்வாறு பெரிய மோசடிகள் இடம்பெற்றிருக்கும் நிலையில் வாகன முறை கேட்டுப் பாவனைக்காக விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. தற்போதும்கூட கடிதம் ஒன்றை வழங்க வந்தபோதிலும் பொலிஸார் எம்மைத் தடுக்கின்றனர். இதுவா நல்லாட்சி? - என்றார். (எ)



ஊரெழு வளர்பிறை பாலர் பாடசாலையின் கால்கோல் விழா மற்றும் பெற்றோர் தினவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை கலையரங்கில் இடம்பெற்றன. (ஐ-21)

# பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கான கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பு

## உறுதியளித்தார் கல்வி அமைச்சர்

கொழும்பு, பெப்.03

பெருந்தோட்ட ஆசிரியர் உதவியாளர்களுக்கான கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உறுதியளித்துள்ளார்.

பெருந்தோட்ட ஆசிரியர் உதவியாளர்களுக்கான 5 ஆம் கட்ட நியமனம் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர், வீ.ராதாகிருஷ்ணன், பெருந்தோட்ட ஆசிரியர் உதவியாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கையை விடுத்திருந்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தவை வருமாறு:-

பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் மேலும் 4 ஆயிரம் ரூபாவை அதிகரித்து 10 ஆயிரம் ரூபாவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை, தற்போது காணப்படும் 60 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

மேலும், தேசிய பாடசாலைகளில் மேலதிகமாகக் காணப்படும் 2 ஆயிரம் ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## மெய்வன்மைப் போட்டிகள்

காரைநகர்,பெப்.03

காரைநகர் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிரதி அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபனும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தியும், இலங்கை வங்கிக் காரைநகர்கிளை முகாமையாளர் ப. செல்வகுமாரும் கலந்து கொள்வர். (ச)

***

யாழ்ப்பாணம் நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உல்லியனொல்லை அம்பாள் ஆலய முன்றிலில் அதிபர் நடராசா தேவராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி உதவிப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை தில்லைநாதனும் கலந்து கொள்வார்.

இதில் பல் வைத்திய நிபுணர் திருமதி நந்தினி உதயகுமார் வெற்றிபெறும் மாணவர்களு பரிசில் வழங்கிக் கௌரவிப்பார். (ச)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.03

ஞானம் பாலச்சந்திரனின் சித்திரக் கவித்திரட்டு நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

# மேல் மாகாணத்திலிருந்து சொந்த மாகாணத்துக்கு ஆசிரியர்கள் இடம்மாற பதில் ஆள் தரவேண்டுமாம்!

## நிபந்தனைக் கால சேவை முடிந்தவர்களுக்குப் புதிய நிபந்தனை

நியமனம் பெற்ற மாகாணத்தில் ஐந்து வருடங்கள் கடமை புரிய வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் மேல்மாகாணப் பாடசாலைகளில் 2011 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற ஆசிரியர்களை அவர்களின் நிபந்தனைக்காலம் முடிவடைந்த பின்னரும் -அவர்களின் சொந்த மாகாணங்களுக்குப் பதில் ஆசிரியர்கள் இன்றி விடுவிக்க முடியாது என மேல்மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு அறிவித்துள்ளது. இதனால் பல ஆசிரியர்கள் உள ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதில் ஆசிரியர்களை நாங்கள் எவ்வாறு கண்டுபிடிப்பது, நியமிப்பது என அவர்கள் விசனமும் தெரிவிக்கின்றனர்.

இந்த் விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ராலினின் கவனத்துக்குக் கொண்டுவந்து தங்களை நியமன நிபந்தனையின் அடிப்படையில் மேல் மாகாணத்தில் இருந்து சொந்த மாகாணங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். மேலும் இதுபற்றிக் கூறப்படுபவை வருமாறு -

2011 ஆம் ஆண்டு மாகாணக் கல்வி அமைச்சு வழங்கிய பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் நியமனம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் நியமனம் பெற்றுக் கொண்ட மாகாணத்தில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவை புரிய வேண்டும், குறித்தகாலம் முடியும் வரை இடமாற்றம் கோர முடியாது என்ற சாரப்பட அறிவுறுத்தல் விடுக்கப்பபட்டுள்ளது.

சேவைக்கால நிபந்தனை முடிந்த நிலையில் தங்களது சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் வழங்குமாறு விண்ணப்பித்திருந்தோம். எமது விண்ணப்பம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் மேல் மாகாண கல்வி அமைச்சுடன் நேரில் தொடர்புகொண்டு கேட்டனர். அதன்போது உங்களை மேல் மாகாணத்தில் இருந்து விடுவிக்கும் கடிதத்தை மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் வதிவிட மாகாண பொதுச்சபை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது'' என்கின்றனர் அந்த ஆசிரியர்கள்.

இந்த வகையில் மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு 14 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பி வைத்துள்ளது. அதில் இந்த விடுவிப்புக் கடிதத்தில் பதில் ஆசிரியர்கள் இன்றி அவர்களை விடுவிக்க முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தவார இறுதியில் இக் கடிதம் வடக்கு மாகாண ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. பதில் ஆசிரியர்களை மேல் மாகாணத்துக்கு வழங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சு தயார் இல்லாத நிலையில் எவ்வாறு அவர்களுக்கு இடமாற்றம் கிடைக்கும்?

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ராலின் கவனத்திலெடுத்து, மேல்மாகாணத்திலிருந்து தங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமிழ்ப் பத்திரிகைத்துறை ஜாம்பவான் அமரர் எஸ்.டி.சிவநாயகம் எழுதிய 'தலைவர் (சௌமியமூர்த்தி) தொண்டமான்' என்னும் வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ள ஆவணப் படங்களை சிவநாயகத்தின் புத்திரர் எஸ்.டி.எஸ்.உதயநாயகன், இ.தொ.கா. ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் பேரனும்முன்னாள் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானிடம் வைபவ ரீதியாகக் கையளிக்கின்றமையும், அருகில் இ.தொ.காவின் தற்போதைய தலைவர் முத்துசிவலிங்கம், ஆலய அறங்காவலர் தெ.ஈஸ்வரன், பத்திரிகையாளர் சிவா இராஜஜோதி ஆகியயோர் நிற்கின்றமையையும் படத்தில் காணலாம்.

## அன்னதான மடம் திறப்பு விழா

சுழிபுரம்,பெப்.03

சுழிபுரம் திருவடி நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதானச் சபைக் கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அ.காங்கேயனும், கௌரவ விருந்தினராக எஸ்.ஜீவராசா, மற்றும் சுழிபுரம் கிராம அலுவலர் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

# ஆபிரிக்க நாடுகளுடன் உறவுகள் பேண எதியோப்பியாவில் இலங்கைத் தூதரகம்!

கொழும்பு, பெப்.03

ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக, ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைமையகம் அமைந்துள்ள எதியோப்பியாவில், தூதுரகம் ஒன்றை இலங்கை திறக்கவுள் ளது.

எதியோப்பியாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தத் தூதாரகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

எதியோப்பியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அந்த நாட்டின் நாடாளுமன்ற சபாநாயகர் அப்துல்லா ஜெமேடாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

எதியோப்பிய அதிபர் முலாது தெசோமையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன்போது, ஆபிரிக்காவின் இராஜதந்திர கேந்திரமாக உள்ள எதியோப்பியாவில் இலங்கைத் தூதரகத்தைத் திறந்து வைப்பதற்கான காரணத்தை அவர் விளக்கிக் கூறவுள்ளார்.

ஜெனீவா உள்ளிட்ட அனைத்துலக அரங்குகளில், இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்ட போது, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவைப் பெற முடியாமல் போனமை, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கைக்குக் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியது.

இதனைக் கருத்தில் கொண்டு, ஆபிரிக்க நாடுகளுடன் மேலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் இலங்கை அரசு ஆர்வம்காட்டி வருகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# திருவாவடுதுறை இளைய ஆதீனம் சைவபரிபாலன சபையில் உரை

திருவாவடுதுறை ஆலயத்தின் இளைய சந்நிதானம் சீர் வளர் சீர் காசி விஸ்வநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார்.

நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சுவாமியின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறஉள்ளது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சுமார் 128 ஆண்டுகள் கால சித்தாந்த சைவப்பணிகளைப் பாராட்டி சைவ பரிபாலன சபைக்கு 'சித்தாந்தச் சைவச்சுடர் நிலையம்' என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தவர் தமிழ்நாடு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் 'பட்ஜெட்' நிதியில் இலங்கைக்கு 125 கோடி ரூபா!

கொழும்பு,பெப்.03

இந்தியாவின் 2017 -18 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு 125 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் 2017- 18 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றத்தில், நிதியமைச்சர் அருண் ஜேட்லியால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு 14 ஆயிரத்து 798 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில், வெளிவிவகார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும், 135 கோடி ரூபா அதிகமாகும்.

இதில், 6 ஆயிரத்து, 479.13 கோடி ரூபா, நாடுகளுக்கான உதவித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக இலங்கைக்கு இந்த ஆண்டில் 125 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக பூட்டானுக்கு 3 ஆயிரத்து 714 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. நேபாளத்துக்கு 375 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட, 75 கோடி ரூபா அதிகமானதாகும்.

கடந்த ஆண்டு 520 கோடி ரூபா ஒதுக்கப்பட்ட ஆப்கானிஸ்தானுக்கு இந்த முறை 350 கோடி ரூபாவே ஒதுக்கப்படுகிறது. ஈரானின் சபஹார் துறைமுகத் திட்டத்துக்கு 150 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளுக்கு 330 கோடி ரூபாவும், பங்களாதேஷுக்கு 125 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஆந்திராவில் கண்ணிவெடித் தாக்குதல்; பொலிஸார் உட்பட 7 பேர் உயிரிழப்பு!



புவனேஷ்வர், பெப்.03

ஆந்திரா - ஒடிசா மாநில எல்லையில் உள்ள கோரபுத் என்ற மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கி பொலிஸார் 7 பேர் உயிரிழந்தனர்.

கோர்புத் பகுதி மாவோயிஸ்ட்டினரின் ஆதிக்கம் அதிகரித்த பிரதேசமாக உள்ளது. அந்த இடத்திலிருந்து கட்டாக் பகுதிக்குப் பொலிஸார் பயிற்சிக்காக மினி பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்தனர்.


அந்த மினிபஸ்ஸில் பொலிஸார் உட்பட பொதுமக்களும் இருந்தனர். அதைக் குறிவைத்து மாவோயிஸ்டுகள் சக்தி வாய்ந்த கண்ணி வெடிகளை வைத்துத் தாக்குதல் நடத்தினர். பொலிஸார் பயணித்த வாகனம் அதில் சிக்கியதில் 6 பொலிஸார் உயிரிழந்தனர்.

இதேவேளை அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒருவரும் இந்தத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார். இந்த நிலையில் பொலிஸாரின் வாகனத்தைக் குறிவைத்தே கண்ணி வெடி வைக்கப்பட்டதாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் இந்தத் தாக்குதலின் பின்னணியில் ஆந்திராவைச் சேர்ந்த மாவோயிஸ்ட்டுகள் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (எ)

# உத்தரப்பிரதேசத்தில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் சாவு

## 30 இற்கும் மேற்பட்டோர் காயம்



கான்பூர், பெப்.03

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவந்த கட்டடம் நேற்றுமுன்தினம் இடிந்து வீழ்ந்ததில் 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 30 இற்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூரின் ஜாஜ் மாவ் பகுதியில் ஒரு வருடமாகக் கட்டப்பட்டு வந்த ஆறு மாடிக் குடியிருப்புக் கட்டுமானப் பணியில் சுமார் 40 இற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலை கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை திடீரென அந்தக் கட்டடம் சரிந்து வீழ்ந்தது.

இந்த விபத்தால் பல தொழிலாளர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இதையடுத்து விபத்து நடைபெற்ற இடத்துக்கு உடனடியாகச் சென்ற தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு 7 பேரின் உடல்களை மீட்டுள்ளனர்.

மேலும் காயங்களுடன் மீட்கப்பட்ட சுமார் 30 பேர் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இதேவேளை, அந்தக் கட்டடத்துக்கு வலுவான அடித்தளம் இல்லாததே விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (எ)



ஏறுதழுவுதலுக்கு ஆதரவாக மெரினாவில் நடத்தப்பட்ட போராட்டத்தில் இளைஞர்கள், மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# பெப்.9 இல் முதல்வராக பொறுப்பேற்கிறாராம் சசி!

## வெளியானது பரபரப்புத் தகவல்

சென்னை, பெப்.03

ஜெயலலிதாவின்மறைவை அடுத்து அ.தி.மு.க. பொதுச் செயலாளராகப் பதவி வகித்து வரும் சசிகலா எதிர்வரும் 8 அல்லது 9 ஆம் திகதியில் முதல்வராகப் பொறுப்பேற்க உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காகத் தமிழகப் பொறுப்பு ஆளுநர் வித்யாசகர்ராவின் சென்னை வருகை தொடர்பான விவரங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகிறது.

ஆனால், ஆளுநர் மாளிகையில் இருந்து எந்த ஒரு பதிலும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும், சசிகலாவின் இந்தத் தீவிர முயற்சியைத் தொடர்ந்து ஆளுநர் வித்யாசகர் ராவுக்கு மத்திய அரசு கண்டிப்பான ஓர் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதாவது முதல்வர் பதவியில் இருந்து தாம் விலகுகிறார் என ஓ.பன்னீர் செல்வம் நேரில் வந்து கடிதம் கொடுத்தால் மட்டுமே ஏற்க வேண்டும்.

பக்ஸ் மூலமாகவோ வேறு நபர்களோ வந்து கொடுத்தால் அதை ஏற்கவே கூடாது என்று கூறப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (எ)

# ஜெயலலிதாவின் உயில் மோடி கையில் எந்தநேரத்திலும் கைதாகலாம் சசிகலா!

## ஜெயாவின் கணக்காய்வாளர் மோடியிடம் தஞ்சம்



சென்னை, பெப்.03

சசிகலா குழு எந்த உயிலைத் தேடிக் கொண்டிருந்ததோ அந்த உயிலோடு மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் கணக்காய்வாளர், மோடியிடம் தஞ்சம் அடைந்து விட்டார் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

எனவே, சசிகலாவுக்கு எதிராகத் தீர்ப்பு வரும் பட்சத்தில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் கைது செய்யப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன எனத் தகவல்கள் கூறுகின்றன.

2011 ஆம் ஆண்டே தனது சொத்துக்களை முழுமையாக எழுதி முடித்த ஜெயலலிதா, நம்பிக் கைக்குரிய பத்திரிகை ஆசிரியர் மூலமாகக் கணக்காய்வாளரிடம் அந்த உயிலைக் கொடுத்தார். சொத்துக் குவிப்பு வழக்கு தீவிரம் அடைந்த நிலையில் உயிலை வெளியிட்டால் மேலும் சிக்கல் வரும் என்று ஜெயலலிதா கருதினார்.

அவர் சசிகலாவை நம்பவேயில்லை என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது ஆனால், ஜெயலலிதா உயில் யாரிடம் இருக்கிறது என்பது சசி குழுவுக்கும் தெரியாது. மறைந்த ஆசிரியரும் யாரிடமும் அது பற்றி வெளியிடவில்லை.

ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த அந்தக் கணக்காய்வாளர் தனது உயிருக்கு ஆபத்து வரலாம் என்பதை அறிந்து பிரதமர் மோடியிடம் தஞ்சம் அடைந்து உயிலை ஒப்படைத்து விட்டார் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், பிரதமரும் ஏன் அமைதியாக இருக்கிறார் என்றால் சொத்துக் குவிப்பின் வழக்கின் தீர்ப்பு எந்த நேரமும் வெளிவரலாம். அப்படி வந்த பின் யாருக்கு ஜெயலலிதாவின் சொத்துகள் போய்ச்சேர வேண்டுமோ அவர்களுக்குச் சென்றடைந்து விடும்.

அதேநேரம் சசிக்கு எதிராகத் தீர்ப்பு வரும் பட்சத்தில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் கைது செய்யப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

இதேவேளை சசி குழுவுக்கு கணக்காய்வாளர் தஞ்சமடைந்த விடயம் தெரிய வர அலறிவிட்டார்கள். எந்த நேரமும் ஆபத்து வரலாம் என்று திகிலடைந்து கிடக்கிறது தற்போதைய ஆக்கிரமிப்பு போயஸ் வட்டாரம் என்று தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ)

# ரஷ்யா செல்கிறார் பிரதமர் மோடி

டில்லி, பெப்.03

ரஷ்யாவில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சர்வதேசப் பொருளாதார மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வதற்காகப் பிரதமர் மோடி ரஷ்யா செல்ல உள்ளார்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் ஜூன் மாதம் ரஷ்யாவில் சர்வதேசப் பொருளாதார மாநாடு நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராகப் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளவுள்ளார். மோடியின் ரஷ்யப் பயணம் குறித்த ஏனைய விவரங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. அவை இறுதி செய்யப்பட்டவுடன் அறிவிக்கப்படும். -என்றார். (எ)

அரச ஊழியர் 48 ஆயிரம் டொலர் வரை ஊழல் செய்யலாம் என்ற

# ருமேனிய அரசின் அதிரடி அறிவிப்பால் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்!

புகாரெஸ்ட், பெப்.03

அரச அதிகாரிகள் 48 ஆயிரம் டொலர்களுக்குள் ஊழல் செய்யலாம் என்ற ருமேனிய அரசின் அதிரடி அறிவிப்பை எதிர்த்து அந்தநாட்டில் பெரியளவில் மக்கள் போராட்டம் வெடித் துள்ளது.

அரச அதிகாரிகள் சுமார் 48 ஆயிரம் டொலர்களுக்கு குறைவாக ஊழல் குற்றம் புரியும் பட்சத்தில், அவர்கள் தண்டிக்கப்படவோ அல்லது சிறைக்கு அனுப்பப்படவோ மாட்டார்கள் என்று ருமேனிய அரசு அறிவித்திருந்தது.

ருமேனியாவில் 1989 ஆம் ஆண்டு கம்யூனிஸ் ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, தற்போது முதலாவது பெரும் மக்கள் போராட்டம் ஒன்று அந்த நாட்டு அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



அரச துறையில் ஊழலை ஊக்குவிக்கும் அந்த அறிவிப்பால் ருமேனிய தலைநகரான புகாரெஸ்ட்டில் சுமார் இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் திரண்டு இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உலகில் முதலாவது நாடாக அரச துறைசார் அதிகாரிகள் லஞ்சம் மற்றும் ஊழல் புரிவதற்கான வாய்ப்பை ருமேனிய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் ருமேனியாவின் சர்வதேச அளவிலான நற்பெயர், ஐரோப்பிய ஒன்றியத்துடனான பிணைப்பு மற்றும் நேட்டோ கூட்டணி நாடுகளுடன் உள்ள உறவுகளில் முறுகல்கள் ஆகியன ஏற்பட்டுள்ளன என்று ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும் போராட்டத்தில் ஈடுபடும் அந்த நாட்டு மக்களை அரசு, பொலிஸ் மற்றும் இராணுவப் படைகளைக் கொண்டு அடக்க முனைவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நியூசிலாந்தில் நிலநடுக்கம்

நியூசிலாந்து வடகிழக்கு தீவுப் பகுதியில் 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஒன்று நேற்றுமுன்தினம் ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் தெற்கு தீவுப் பகுதியான கைகோர் தீவின் வடகிழக்குப் பகுதியிலேயே இந்த நடுக்கம் இடம்பெற்றுள்ளது.

தென் பசுபிக் பிராந்தியத்திலுள்ள பல்வேறு தீவுக் கூட்டங்களில் அதிகளவான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும் அந்த நிலநடுக்கங்களால் இதுவரை எவ்வித சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

மேலும் கடந்த வருடம் நவம்பர் மாதம் அந்த நாட்டில் ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தால் 2 பேர் உயிரிழந்தனர். அத்துடன் அதிகளவிலான பொருள்சேதம் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

## அமெ. ராஜாங்கச் செயலராக றெக்ஸ் தில்லர்சன் நியமனம்



வொஷிங்டன், பெப்.03

அமெரிக்காவின் புதிய ராஜாங்கச் செயலாளராக றெக்ஸ் தில்லர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் பரிந்துரைக்கப்பட்ட அவரை, அமெரிக்க செனட் சபை அங்கீகரித்துள்ளது.

இதற்கான வாக்கெடுப்பில் 56 பேர் அவருக்கு ஆதரவளித்தனர்; 43 பேர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

டெக்சாஸ் மாகாணத்தை பூர்வீகமாகக் கொண்ட 64 வயதான தில்லர்சன், எக்சொன் மொபில் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமாவார்.

எனினும், அவர் இதுவரையில் அரசியல் சார்ந்த எந்தப் பதவிகளையும் வகித்ததில்லை.

மேலும் அவர் ரஷ்யாவுடன் கொண்டிருந்த தொடர்பு தொடர்பான சர்ச்சையும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சிரியப் படைக்கு முதன்முதலாக அமெரிக்க கவச வாகனங்கள்

ஐ.எஸ்ஸை அழிப்பதற்கான ட்ரம்பின் முதற்கட்ட நடவடிக்கை

வொஷிங்டன், பெப்.03

ஐ.எஸ். அமைப்பை எதிர்த்துப் போராடுவதற்காகச் சிரிய இராணுவத்துக்கு முதன்முறையாகக் கவச வாகனங்களை அமெரிக்கா வழங்கவுள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தை 30 நாள்களுக்குள் அழித்தொழிக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அதற்கான முன் நடவடிக்கையாக சிரிய இராணுவத்துக்கு முதன்முறையாக அமெரிக்க கவச வாகனங்களை அளிக்க உத்தரவிட்டுள்ளார்.



2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கூடாரமாக சிரியா மாறியுள்ளது. பயங்கரவாதிகளை எதிர்த்துப் போரிடும் குர்திஷ்-சிரிய கூட்டுப்படைகளுடன் இணைந்து அமெரிக்காவும் ஐ.எஸ். மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தநிலையில், கடந்த 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ட்ரம்ப், பயங்கரவாதத்தை, குறிப்பாக ஐ.எஸ். இயக்கத்தை, முற்றாக அழிக்கப் போவதாக சூளுரைத்திருந்தார். இதுதொடர்பில், அடுத்த ஒரு மாதத்துக்குள் ஐ.எஸ். இயக்கம் பூண்டோடு அழிக்கப்படும் என்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளித்திருந்தார்.

இதையடுத்து, இராணுவ உயரதிகாரிகளுடன் ட்ரம்ப் நடத்திய ஆலோசனையின் பேரில், சிரியக் கூட்டுப் படையினருக்கு கவச வாகனங்களை அளிக்க முன்வந்துள்ளார்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கும் சிரிய இராணுவம், கவச வாகனங்களின் வருகையுடன் தமது படை புத்துணர்ச்சி பெற்றிருப்பதாகவும், ஜிகாதிகளுடன் போரிடுவதற்கு ஊக்களிப்பதாகவும் தெரிவித்துள்ளது. (எ)

## ஐந்து வயது ஈரானியச் சிறுவன் விமான நிலையத்தில் தடுத்து வைப்பு

ட்ரம்பின் குடிவரவு உத்தரவை அடுத்து



வொஷிங்டன், பெப்.03

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடிவரவு உத்தரவையடுத்து, பாதுகாப்புக் காரணங்கள் கருதி 5 வயது ஈரானியச் சிறுவனை அதிகாரிகள் தடுத்து வைத்த சம்பவம் வொஷிங்டன் விமான நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தைச் சேர்ந்த அந்தச் சிறுவன் அங்கிருந்து, தனது உறவினர் ஒருவருடன் வொஷிங்டனில் உள்ள டலஸ் விமான நிலையத்தைச் சென்றடைந்தான். அங்கு அவனை விசாரித்த விமான நிலைய அதிகாரிகள், அமெரிக்க குடிமகனுக்கான ஆதாரங்களை அந்தச் சிறுவன் வைத்திருந்த போதும், ஈரானிய முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் அவனைத் தடுத்து வைத்தனர்.

இந்தநிலையில் அந்தச்சிறுவனை வரவேற்கவென டலஸ் விமான நிலையத்துக்கு வெளியே காத்திருந்த அவனின் தாய் இதையறிந்து பதைபதைத்துப் போனார்.

ஒருசில மணி நேரங்களின் பின் அந்தச்சிறுவன் அவனது தாயிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தச்சம்பவம் குறித்துப் பேசிய விமான நிலைய அதிகாரிகள், அமெரிக்காவின் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி ட்ரம்ப்பின் உத்தரவைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும் என்பதன் பேரிலேயே அந்தச் சிறுவன் தடுத்து வைக்கப்பட்டிருந்தான் என்று குறிப்பிட்டனர். (எ)

## அமெரிக்காவின் பிரதம நீதியரசராக பிராந்திய நீதிபதியின் பெயர் பரிந்துரை



வொஷிங்டன், பெப்.03

அமெரிக்காவின் பிரதம நீதியரசராக, நெயில் கோர்சச்சின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்துள்ளார். அவரின் நியமனத்துக்கு விரைவாக ஒப்புதல் வழங்குமாறு அமெரிக்க செனட் அவையை ட்ரம்ப் கேட்டுள்ளார்.

இந்தநிலையில் கொலராடோவின் பிராந்திய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான அவரின் நியமனம் தொடர்பில் அமெரிக்க செனட் சபை தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அவர் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன என்று செனட் சபையின் உறுப்பினர்கள் முன்னதாகவே தெரிவித்து வந்தனர்.

எவ்வாறாயினும், புதிய பல நியமனங்கள் தொடர்பான வாக்கெடுப்பை ஜனநாயகக் கட்சியினர் புறக்கணித்து வருகின்றனர்.

இதனால் பதவி நியமனங்களில் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# புதிய நிலையான அபிவிருத்திச் சட்டமூலம் அரசியல் ரீதியாகத் தமிழர்களைப் பாதிக்கும்

## வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, பெப்.03

இலங்கை அரசு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு நிலையான அபிவிருத்திச் சட்டம் ஒன்றை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. இதற்கு, முதல் கட்டமாக நிலையான அபிவிருத்திச் சட்ட மூலம் ஒன்றைத் தயாரித்து மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பி வைத்திருக்கிறது. இது மாகாணங்களின் அதிகாரங்களைப் பறிப்பதாகவும், அரசியல் ரீதியாகத் தமிழ்மக்களைப்பாதிப்பதாகவும் உள்ளது. இதனாலேயே, இந்தப் புதிய அபிவிருத்திச் சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரித்துள்ளது.

இவ்வாறு வடக்குகூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் கூட்டுறவு உதவி ஆணையாளர் பணிமனைக் 'கட்டிடத் திறப்புவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு:-

புதிய அரசமைப்புச் சட்டமொன்றை உருவாக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் அரசு, அதற்கு முன்னதாக அவசரம் அவசரமாக நிலையான அபிவிருத்திச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்த நிலையான அபிவிருத்திச் சட்டம் இலங்கையை அபிவிருத்திப் பாதையில் விரைந்து முன்னேற்றுவதற்காகவே கொண்டு வரப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான சட்ட மூலத்தை நாங்கள் நிராகரித்திருப்பதால் வடக்கு மாகாண சபை அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது என்று அரசுத்தரப்பு எங்கள் மீது குற்றம் சாட்டக்கூடும்.

அபிவிருத்திக்கு நாங்கள் ஒருபோதும் தடையானவர்கள் அல்லர். அதுவும், போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற ரீதியில் அபிவிருத்தித் திட்டங்களை இரு கைகூப்பி வரவேற்பதற்குத் தயாராகவே உள்ளோம். ஆனால், அபிவிருத்தி என்ற பெயரால் தமிழ் மக்களின் உரிமைகளை - மாகாண சபைக்கிருக்கும் அற்ப சொற்ப அதிகாரங்களை - மத்திய அரசு பறிப்பதை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை அரசு அந்நிய முதலீடுகளையும் ஏற்றுமதியையும் ஊக்குவிக்கும் நோக்கில் தேசியக் கொள்கையை உருவாக்கவுள்ளது. இதன்படி வடகிழக்குப் பொருளாதார வாயில், தென்மேற்குப் பொருளாதார வாயில், மலைநாட்டு உப பொருளாதார வாயில் என்று இலங்கை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிலையான அபிவிருத்திப் பேரவை ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

அபிவிருத்திப் பேரவையில் 11 பேர் உறுப்பினர்களாக இருப்பார்கள்என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களில் மூன்று பேர் மாத்திரமே மாகாண சபைகளின் பிரதிநிதிகளாக இருப்பர்.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களும் ஒவ்வொருவரைப் பெயர் குறிப்பிட்டுப் பிரேரிக்க வேண்டும். இவர்களில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் மூன்று பிரதிநிதிகளை ஜனாதிபதி தெரிவு செய்வார். இந்த முறையில் அபிவிருத்திப் பேரவையில் வடக்கு, கிழக்குக்கான நிரந்தர உறுப்புரிமை இல்லை. சுழற்சி முறையில் கிடைக்கும் பிரதிநிதித்துவமும் எங்களுக்கு எப்போது கிடைக்கும் என்றும் சொல்ல முடியாது.

எமது மாகாணத்தின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையிலேயே - அபிவிருத்திப் பேரவை எமது மாகாணத்தின் திட்டங்களைத் தீர்மானிக்கும் வகையிலேயே - நிலையான அபிவிருத்திச் சட்டமூலம் வரையப்பட்டுள்ளது.

அரசு தனது விருப்பத் திட்டங்களை எமது மாகாணத்தில் திணிப்பதற்கு வழிவிடு என்று எங்களைப் புறந்தள்ளி விடுகின்ற சட்டமூலமாக இது உள்ளது. என்ன தேவை என்று வழிகாட்டுங்கள் என்று எங்களைக் கேட்கும் சட்டமூலமாக இது இல்லை. இதனாலேயே அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தும் இந்த நிலையான அபிவிருத்திச் சட்ட மூலத்தை நாங்கள் நிராகரித்துள்ளோம்.- என்றார். (ஐ-10)



# வவுனியா பூந்தோட்டத்தில் சனசமூக நிலையம் திறப்பு

வவுனியா பூந்தோட்டம் சனசமூக நிலையத்துக்கான புதிய கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் பாதீட்டில் 40 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இந்தச் சனசமூக நிலையக் கட்டடத்தை வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.

பல ஆண்டு கால தேவையாகக் காணப்பட்ட கட்டடத்தைப் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்படுகின்றது. இந்தக் கட்டடத்தில் நூலகம் இயங்கவுள்ளதுடன் முன்பள்ளியும் செயற்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சருடன் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், நகரசபை செயலளார் இ.தயாபரன், பூந்தோட்டம் பாடசாலையின் அதிபர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# அனுமதியின்றி வைத்திருந்த பனை மரங்கள் மீட்கப்பட்டன

## கைதான இளைஞருக்குப் பொலிஸ் பிணை



சித்தங்கேணி, பெப்.03

அராலி மத்திப் பகுதியில் வீடொன்றில் அனுமதி இல்லாது வைத்திருந்த பனை மர வளைகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் திடீர் சுற்றி வளைப்பின் போது மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் அடிப்படையில் அவ்வீட்டுக்கார உரிமையாளரான 24 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்ட பனைமர வளைகள் 3 லட்சம் ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கைப் பதிவு செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் சந்தேக நபரை பொலிஸ் பிணையில் விடு வித்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-58)

# உயிரின இருப்புக்கு...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பல குளங்கள் மக்கள் குடியிருப்பாக மாறியுள்ளன. பல நீரேந்து பிரதேசங்கள் சட்ட விரோதமாக அபகரிக் கப்பட்டு வருகின்றன. மற்றும் பல உள்நாட்டு நீர்த்தேக்கங்கள் அழிவடைந்த நிலையில் மழை நீரைத் தேக்க முடியாத நிலையிலுள்ளது. பல நீர்த் தேக்கங்களை ஆழப்படுத்துவதன் மூலம் நீர் கொள்ளும் அளவை அதிகரிக்கச் செய்ய முடியும். மற்றும் பருவ காலத்தில் கிடைக்கும் மழைநீரானது கடலைச் சென்றடைவதைத் தடுத்து அவற்றை இயன்றளவில் தேக்குவதனூடாக ஈரநில சூழல் தொகுதி, தாவரங்கள், உயிரினங்களின் அழிவைக் குறைப்பதுடன் நெல் உற்பத்தியை அதிகரித்து நாட்டின் தன்னிறைவு பொருளாதாரத்தை அடையலாம்.

2016ஆம் ஆண்டின் பருவ மழை பொய்த்ததன் காரணமாக உள்நாட்டு நன்நீர்த் தேக்கங்களுக்கு நீர் கிடைக்காமையால் பெரிய அளவில் நெற் செய்கைகள் அழிவடைந்துள்ளன. இதனால் 2017 ஆம் ஆண்டின் பிரதான உணவான நெல்லரிசிக்கான தட்டுப்பாடுகளும் விலையுயர்வுகளும் ஏற்படும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

இத்தகைய ஈரநில வறட்சியால் ஏனைய இடங்களின் தரைக்கீழ் நீர் மட்டம் குறைவடைந்து குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடும் ஏற்படலாம். மற்றும் ஈரநில சூழல் தொகுதியின் தாவரங்கள், புல்லினங்கள் பாதிப்படைவதுடன் நீர்ச் சூழல் தொகுதியின் நீர் வற்றியுள்ளமையால் உயிரினங்கள், பறவைகள், இடம் மாறுவதுடன் நீர்ச் சூழலிலே உள்ள அதிகமான உயிரிகள் இறப்பதற்கு நேரிடும். இதனால் உயிரின பல்வகைமையில் இது மாற்றத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

எனவே, ஈரநிலங்களின் முக்கியத்துவத்தையும் நீரின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து ஒவ்வொரு மனிதனும் தனியாகவும் குழுவாகவும் ஈரநிலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை உணர்ந்து செயற் படுவதுடன் ஈரநிலங்களின் செழிப்பை மேலும் பேணுவதற்கும் ஈரநிலம் மூலமாகக் கிடைக்கும் நன்மைகளை அதிகரிக்கவும் நீர் வீணாவதைத் தடுப்பதற்கும் மழைநீரைச் சேமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டு பொறுப்பான அரச நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று மேற்கொள்ள வேண்டும்.

# வட்டக்கச்சி வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டடம் திறப்பு







கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் ஒரு மாடி வகுப்பறைக்கட்டடம் நேற்றுதிறந்துவைக்கப்பட்டது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் தொகுதியே திறந்து வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியசாலை கட்டடங்கள் இரண்டில் இயங்கிய வட்டக்கச்சி ஆரம்ப பாடசாலை தற்போது அனைத்து சமூக நலன்விரும்பிகளின் உதவியுடன் புதுப்பொலிவு பெற்று வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு வகுப்பறை கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தவநாதன், அரியரத்தினம், பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், க.முருகவேல் மற்றும் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-70)

# இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டி; தென்னாபிரிக்க அணி இலகு வெற்றியைப் பெற்றது!

டர்பன், பெப்.03

டேவிட் மில்லரின் வான வேடிக்கையுடன் 5 ஒருநாள் போட்டிகளை கொண்ட தொடரில், இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 121 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.


இதன் மூலம் இலங்கைக்கு எதிரான இந்தத் தொடரில் அது 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

டர்பன், கிங்க்ஸ்மீட்டில் நடைபெற்ற தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

இப்போட்டிக்காக இலங்கை அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. கடந்த போட்டியில் அறிமுகமாகிய சந்துன் வீரக்கொடி மற்றும் சுழல் பந்து வீச்சாளார் ஜெப்ரி வண்டர்சேக்கு பதிலாக சகல துறை ஆட்டக்காரர்களான சசித் பத்திரண மற்றும் சதுரங்க டி சில்வா ஆகியோர் உள்வாங்கப் பட்டிருந்தனர்.

அதே நேரம், தென்னாபிரிக்க அணி, கடந்த போட்டியில் வெற்றியீட்டிய அதே அணியுடன் களமிறங்கியது.






அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, முதல் விக்கெட்டாக ஹஷிம் அம்லாவை 19 ஓட்டங்களுக்குள் இழந்தது.

அதனை தொடர்ந்து களமிறங்கிய டுப்லெஸ்சிஸ் குவிண்டன்டிகொக்குடன் இணைந்து அபாரமாக துடுப்பெடுத்தாடி இரண்டாவது விக்கெட்டுக்காக 46 ஓட்டங்களை பெற்று அணியை வலுப்படுத்தினார். குவிண்டன் டி கொக் 17 ஓட்டங்களை பெற்றிருந்த போது தனஞ்சய டி சில்வாவின் பந்து வீச்சில் சுரங்க லக்மாலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் ஏபி டி வில்லியர்ஸ் மற்றும் டுமினி குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து சென்றனர்.

ஆனால், டு ப்லெஸ்சிசுடன் இணைந்து கொண்ட டேவிட் மில்லர் ஐந்தாவது விக்கெட்டுக்காக 117 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று தென்னாபிரிக்க அணியை வலுவான நிலைக்கு எடுத்துச் சென்றார்.

டு ப்லெஸ்சிஸ் 7 பவுண்டரிகள் 1 சிக்ஸர் உள்ளடங்கலாக 105 ஓட்டங்களையும், போட்டியின் இறுதி நேரத்தில் வான வேடிக்கை காட்டிய டேவிட் மில்லர் மூன்று பவுண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 307 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

சிறப்பாக பந்து வீசிய சுரங்க லக்மால் 54 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


அதனை தொடர்ந்து களமிறங்கியது இலங்கை அணி. உபுல் தரங்க மற்றும் நிரோஷன் திக்வெல்ல முதல் விக்கெட்டுக்காக 45 ஓட்டங்களை பெற்று கொடுத்தனர்.

ஆனால், ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றதால் இலங்கை அணி 37.5 ஓவர்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

கடந்த போட்டியில் அரை சதம் தாண்டிய குசல் மெண்டிஸ் 20 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அதே நேரம் கூடிய ஓட்டங் களாக தினேஷ் சந்திமால் 36 ஓட்டங்களை பதிவு செய்தார். சிறப்பாக பந்து வீசிய.வெய்ன் பார்னெல், ஜேபி டுமினி மற்றும் இம்ரான் தஹிர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக டுப்லெஸ்சிஸ் தெரிவு செய்யப்பட்டார் இந்தத் தொடரின் மூன்றாவது போட்டி நாளை ஜோகன் னஸ்பர்க், நியூ வாண்டரர்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சென். ஜோன்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டி







யாழ்ப்பாணம், பெப்.03

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டி கடந்த 31ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வணக்கத்துக்குரிய சாமுவேல் பொன்னையாவும், திருமதி. றொஸ்னி பொன்னையாவும் கலந்து கொண்டனர். (க-10)

# உலகக் கிண்ணப்போட்டியில் கிளிநொச்சி மாணவிகள்!

கிளிநொச்சி, பெப்.03

இலங்கையின் றோல் போல் தேசிய அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீராங்கனைகள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி உயர்தர மாணவிகளான துலக்சினி விக்னேஸ்வரன், சிறிகாந்தன் திவ்யா ஆகியோரே இவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதிவரை பங்களாதேஷில் நடை பெறவுள்ள உலகக் கிண்ண றோல் போல் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, மிகக் குறுகிய காலத்திற்குள் பயிற்சிகளைப் பெற்று கடந்த வருட இறுதிப் பகுதியில் நடைபெற்ற தேசிய ரீதியிலான போட்டியில் கிளிநொச்சி மாவட்ட றோல் போல் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு அணிகளும் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.





பெரியளவிலான வசதிகள் எவையும் இன்றியே இவர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். அத்துடன், இந்த அணியினர் பயிற்சியில் ஈடுபடுவதற்கு கிளிநொச்சியில் இவர்களுக்கான ஒரு பிரத்தியேக உள்ளரங்கம் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது.(க-70)

## இங்கிலாந்துக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரை வென்றது இந்தியா!

# டோனியை பாராட்டுகிறார் விராட் கோஹ்லி

பெங்களூர், பெப்.03

இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது மற்றும் கடைசி இருபதுக்கு 20 போட்டியில் 75 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலான 3 ஆவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.




முதலில் துடுப்பெடுத்து ஆடிய இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களைக் குவித்து, இங்கிலாந்து அணிக்கு 203 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது.

இந்திய அணியில் அதிகபட்சமாக ரெய்னா 63 ஓட்டங்களையும், டோனி 56 ஓட்டங்களையும் குவித் தனர். இங்கிலாந்து தரப்பில் மில்ஸ், ஜோர் டான், ஸ்டோக்ஸ், ப்ளன் கிட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

203 என்ற கடின இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரரான சாம் பில்லிங்ஸ் 8 ஓட்டங்களில் யுஸ்வேந்திரா சாஹல் பந்தில் ஆட்டமிழந்தார். ஆரம்பத்திலேயே விக் கெட்டைப் பறிகொடுத்த இங்கிலாந்து அணியின் மற்றொரு ஆரம்ப வீரரான ஜெசன் ராய் 32 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சிறப்பாகப் பந்து வீசிய இந்திய பந்து வீச்சாளர்கள் சீரான இடை வெளியில் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை பெவிலியனுக்கு அனுப் பினர். 16. 3 ஓவரில் இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக ளையும் இழந்தது. இதனால் இந்திய அணி 75 வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றது.

இந்தியா தரப்பில் யுஸ்வேந்திரா சாஹல் நான்கு ஓவர்களுக்கு 25 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இவருடன் பும்ராவும் தன் பங்கிற்கு 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப் பற்றினார்.

6 விக்கெட்டுகளை கைப்பற்றிய யுஸ்வேந்திரா சாஹல் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். தொடர் நாயகன் விருதும் சாஹலுக்கே வழங்கப் பட்டது.

3 போட்டிகள் கொண்ட இந்த இருபதுக்கு 20 தொடரில் இந்தியா 2 -1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியுள்ளது.

இதேவேளை, இந்தியா வின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக திகழ்ந்த டோனியை அணித்தலைவர் கோஹ்லி பாராட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கிலாந்துக்கு எதிரான தொடரை வென்றது மறக்க இயலாத ஒன்றாகும். இந்த தொடரின் 3 நிலைகளிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, இருபதுக்கு 20) சிறப்பாகச் செயற்பட்டோம்.

சிரேஷ்ட வீரர்களான டோனி, யுவராஜ்சிங் மற்றும் ஆசிஷ் நெக்ராவை பாராட்டுகிறேன். அவர் களது ஆலோசனைகளை நான் பெற்றேன். அவர்கள் மிகவும் புத்திசாலிகள். எல்லாப் பாராட்டும் அவர் களைத்தான் சென்றடை யும்.

நான்தான் டோனியை முன்னதாக களம் இறக்கி னேன். அவரது அதிரடி யான ஆட்டம் முக்கிய பங்கு வகித்தது. தொடரை முடிவு செய்யும் இந்த ஆட்டத்தில் அவரது பங்களிப்பு மகத்தானது. ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தலைவர் பதவியில் இருந்து விலகிய பின்னர் அவர் பங்கேற்ற முதல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தினார். டோனி விலை மதிப்பற்ற வீரர் ஆவார்.

அத்துடன், பெங்களூர் மைதான ஆடுகளத் தன் மைக்கு ஏற்ற வகையில் சஹால் பந்து வீசினார். எப்படிப் பந்து வீச வேண் டும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். நான் அவர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன். அதற்கு ஏற்ற வகையில் மிகவும் திறமையாக பந்து வீசினார். அவரது பந்து வீச்சு நேர்த் தியாக இருந்தது.

ஜோர்டான் ஓவரில் யுவராஜ் அதிரடியாக விளையாடி, ஆட்டத்தை மாற்றி 200 ஓட்டங்களைக் குவிக்கக் காரணமாக அமைந்தார். 200 ஓட்டங் களுக்கு மேல் தாண்டி யமை கூடுதல் நம்பிக் கையை ஏற்படுத்தியது.- என்றும் தெரிவித்துள்ளார்.

## 2016 ஆம் ஆண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு







யாழ்ப்பாணம், பெப்.03

2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

அமரர் வேலுப்பிள்ளை நிதியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வு, கம்பர்மலை வல்வெட்டித்துறையில் உள்ள வேலுப்பிள்ளை நினைவாலயத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில், 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்களுக்கான விருதுகளை பிரபல கழகங் களைச் சேர்ந்த உதைபந் தாட்ட வீரர்கள் பெற்றுக் கொண்டனர். (க-10)

## சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் லோங், டன் இல்லங்கள் இணைச் சம்பியன்களாயின!

யாழ்ப்பாணம், பெப்.03

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் இல்ல மெய் வன்மை போட்டி கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அருட் தந்தை ஜெறோ செல்வ நாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார். சிறப்பு விருந் தினர்களாக பிரிகேடியர் சுபசிங்ஹ மற்றும் லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் அருளானந்தம் ஜெயராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

லோங், டன், மத்தியூஸ், பொஞ்ஜீன் ஆகிய நான்கு இல்லங்களுக்கு இடையில் போட்டிகள் இடம்பெற்றன.

இறுதியில் லோங் மற்றும் டன் இல்லங்கள் இணைச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. (க-10)







*கிளிநொச்சி – கரைச்சி பெரியபரந்தனில்*

# விளையாட்டு மைதானத்தை உழுத உழவியந்திரத்தை மறித்து எதிர்ப்பு





கிளிநொச்சி, பெப்.03

கிளிநொச்சி–கரைச்சிபெரிய பரந்தன் தாரணி குடியிருப்பில் உள்ள வானவில் விளையாட்டு மைதானத்தை உழுத உழவு இயந்திரத்தை மறித்து பிரதேச மக்கள் எதிர்ப்புத்தெரிவித்தனர்.

அந்தக் காணி தங்களுடையது என்று இருவர் உரிமை கோரி வருகின்றனர். இதே வேளை, இந்தக் காணியை தங்கள் கிராம இளைஞர்களும் முன்பள்ளி சிறாஜுகளும் 1991 ஆம்ஆண்டுமுதல்பயன்படுத்தி வருகின்றனர்எனபொதுமக்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் காணி தொடர்பில்உரிமைகோருகின்றவர்களுக்கும் தாரணி குடியிருப்பு மக்களுக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் நிலவி வந்துள்ளன. இந்நிலையில் காணிக்கு உரிமை கோருகின்றவர்களால் உழவு இயந்திரம் மூலம் விளையாட்டுமைதானம் உழவு செய்யப்பட்டுள்ளது.

இதனை அறிந்த, கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் உட்பட இளைஞர்கள், உழவு இயந்திரத்தை மறித்து வைத்து தங்களின் எதிர்ப்பை வெளியிட்டதோடு உழவு செய்யப்பட்ட பகுதியை மீளவும் வழமைபோன்று சமதரையாக மாற்றியமைத்து தருமாறும், அதுவரை உழவு இயந்திரத்தைவிடுவிக்கப்போவதில்லைஎனதெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் அங்கு சென்றபொலிஸார்சம்பவ இடத்துக்குச் சென்று சமரசம் செய்து உழவு இயந்திரத்தை விடுவித்தனர்.

கிராம மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இருவரைபொலிஸ் நிலையத்திற்குவருமாறும்கூறிச் சென்றனர். (ம-70)

# நிறம் மாற்றிய வாகனத்தை கொண்டு சென்றவருக்கு பிணை

அச்சுவேலி, பெப்.02

சட்டவிரோத செயற்பாட்டிற்குப்பயன்படுத்தும்நோக்கத்துடன், நீலநிற கார் ஒன்றை வெள்ளை நிறத்திற்கு மாற்றி, யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றசாரதிகைதுசெய்யப்பட்டு நீதிபதிக்குமுன்பாகஆஜர்படுத்தப்பட்டபோது அவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அவரது கார் ஒரு மில்லியன் ரூபா பிணை முறியில் விடுவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அதிகாலை 1.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில்இருந்து காங்கேசன்துறைப்பகுதியைநோக்கி அந்தக் கார் சென்றுகொண்டிருந்தபோது மல்லாகம் சந்தியில் நின்ற தெல்லிப்பழைப் பொலிஸார் அதை மறித்து சோதனையிட்டனர்.

அதன்போது வாகனத்தின் பதிவு புத்தகத்தில் உள்ள நிறத்திற்குதற்போது உள்ள நிறத்திற்கும் வேறுபாடு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சாரதியைக் கைது செய்து விசாரணைமேற்கொண்டபோது அவர் முன்னுக்கு பின்னர் முரணானவகையில்பதிலளித்தார் எனக் கூறிய பொலிஸார், கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ளநண்பன் ஒருவரிடம் அந்தக்கார் வாங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார் என்றனர்.

அவரது பதிலில் சந்தேகம் ஏற்பட்டமையால் அவரைக் கைதுசெய்தபொலிஸார்நேற்று முன்தினம் மாலை மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-09)

*பிரித்தானியரால் பிரகடனப்படுத்தப்பட்ட*

# தேசத் துரோகிகள் பட்டியலில் இருந்து 7 முஸ்லிம்களை நீக்க நடவடிக்கை

கொழும்பு, பெப்.03

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் தேசத் துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்ட கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த ஏழு முஸ்லிம்களுக்கு எதிரான அறிவிப்பை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர்விஜயதாசராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த ஏழு முஸ்லிம்களுக்கும் எதிரான அறிவிப்பை நீக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமைய அந்த அறிவிப்பை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறுநீதிஅமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கானபணிகளைஆரம்பித்துள்ள நீதி அமைச்சர் விஜயதாச, தேசத்துரோகிகளாகப்பிரகடனம்செய்யப்பட்டுள்ள ஏழு முஸ்லிம்கள் தொடர்பான தகவல்களைவழங்குமாறு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் கேட்டுள்ளார்.

அதற்கமையநேற்றுஅமைச்சர் விஜயதாசவுக்கு அந்தத் தகவல்களை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் எழுத்து மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டமையால் 1804ஆம்ஆண்டுஜூன்4ஆம் திகதி தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்ட 7 முஸ்லிம்களையும்,நாட்டின்சுதந்திரத்துக்காகப் போராடிய முஸ்லிம் தலைவர்கள் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த ஜனவரி 24ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கடிதம்அனுப்பிவைத்திருந்தார்.

மட்டக்களப்புமாவட்டத்தைச் சேர்ந்த மீரா ஒசன் அவ்வக்கர் (ராய்மூனை), ஒசன் லெப்பை உதுமா லெப்பை (ராய்முனை), அவ்வக்கர் ஈஸா முகாந்திரம் (சம்மாந்துறை), அனீஸ்லெப்பை (மருதமுனை) ஆகியோரும், திரு கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சேகு தீதி (தோப்பூர்), சலம்பதி உடையார் (குச்சவெளி), பீர் முகம்மது ஆகியோரும் இவ்வாறு தேசத்துரோகிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளனர் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (ஓ)

# திருமலையில் இருந்து புறப்பட்டபோது காணாமற்போன படகு தொடர்பில் ஆராய்வு

*சர்வதேசத்துக்கு அறிவித்துள்ளது மீன்பிடி அமைச்சு*

கொழும்பு, பெப்.03

திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டபோது காணாமற்போன படகு தொடர்பில் ஆராய்வது சம்பந்தமாக சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னர் காணாமற்போன 'மடு ரெஜின - 23' எனப்படும் இந்த இழுவைப் படகில் ஐந்து மீனவர்கள் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் கடற்படையினர் மற்றும் கடல் பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து இந்தப் படகைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதும் இதுவரை எந்தத் தகவலும் தெரியவரவில்லை.

இதையடுத்து இந்தப் படகு தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் உடன் அறிவிக்குமாறு இந்து சமுத்திரத்திலுள்ள அனைத்து நாடுகளின் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் இந்தியா, மாலைதீவு, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மியன்மார் உள்ளிட்ட நாடுகளின் அதிகாரிகள் அவதானம் செலுத்தியிருப்பார்கள் எனவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஓ)

# கட்டிமுடிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்தும் திறக்கப்படாத சிறுவர் தடுப்பு இல்லம்

*பற்றைகள் மண்டிக் காட்சியளிக்கின்றது*



அச்சுவேலி, பெப்.03

அச்சுவேலியில்வடமாகாண சுகாதார அமைச்சின் நிதியுதவியுடன் கடந்த வருடம் கட்டி முடிக்கப்பட்ட சிறுவர் தடுப்பு இல்லம் திறந்து பயன்படுத்தப்படாமையால் பற்றைகள் மண்டிக் காணப்படுகின்றமை தொடர்பாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டடத்தை மீண்டும் புனரமைக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த ஜனவரி மாதம் அந்த இல்லத்தை திறந்துவைப்பார் எனத் தெரிவித்து திகதி குறிக்கப்பட்ட போதிலும் அவரது வேலைப்பளு காரணமாகவே திறப்பு விழா பிற்போடப்பட்டு வருகின்றது எனவும் தெரியவருகின்றது.

நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டு சந்தேகநபர்களாக இனங்காணப்படும் சிறுவர்களைக் குற்றத்தீர்ப்பு வழங்கும் வரை தடுத்து வைப்பதற்காக ஒரு தடுப்பு இல்லம் வேண்டும் என சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள வடமாகாண ஆணையாளர் விடுத்த வேண்டுகோளுக்கு இரு மாடிகளைக் கொண்டதாக சகல வசதிகளுடனும் அந்த தடுப்பு இல்லம் கட்டி முடிக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு வேலைகள் தொடங்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் அது திறந்துவைக்கப்படாமையால் கட்டடத்தைச் சுற்றி காடுகளும் புதர்களுமாக காணப்படுவதுடன் உலோகங்களால் அமைக்கப்பட்ட கதவுகளும் துருப்பிடிக்கும் நிலைக்கு மாறியுள்ளன.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-09)

# 69 ஆவது சுதந்திர தினமான நாளை யாழில் கறுப்புப்பட்டிப் போராட்டம்

*மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெறும்*

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் 69 ஆவது சுதந்திரதினம்நாளைநடைபெறவுள்ளநிலையில், ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாககறுப்புப்பட்டிப்போராட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிமை நடத்திய ஊடகவியியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில்,

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் நாளை சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தகாலம்முதல்தமிழ் மக்கள்பல்வேறுதுன்பங்களையே அனுபவித்து வருகின்றனர். தற்போதும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

இந்நிலையில், சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதில் கூற வேண்டும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள்விடுவிக்கப்படவேண்டும் என்பதுடன் தொடர்ந்தும் காணிகள் ஆக்கிரமிப்பது நிறுத்தப்பட வேண்டும், இனப்படு கொலைக்குநீதிவேண்டும், சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவிருக்கின்றோம்.

நாளை காலை 8 மணிமுதல் 10 மணிவரை மிகவும் அமைதியானமுறையில்இந்தப்போராட்டம் இடம்பெறும். இதை எவராயினும் குழப்ப முற்பட்டால் அது அமைதியற்ற போராட்டமாக மாறி எழுச்சிப் போராட்டமாக வடிவம் பெறும்.

இலங்கை வரலாற்றிலேயே கடந்த 2002 ஆம் ஆண்டுசுதந்திர தினத்தன்று யாழ்.மாவட்டத்தில் தேசியக் கொடிகள் பறக்காமல்கறுப்புக் கொடிகள்பறந்தன. அந்த நிலைமை மீண்டும் ஏற்படுத்த வேண்டாம். – என்றார் சிவாஜிலிங்கம்.

நாளைய போராட்டத்தில் அரசியல்கைதிகள், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பலதரப்பினர்கள் பங்குபற்றவுள்ளனர். இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ள அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம)

காலைக்கதிர்
Kalaikkathir

## விக்கியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனவே வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அந்தப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கி விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் பங்காளிக் கட்சியான மஹஜன ஐக்கிய முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்–

சர்வதேச நீதிமன்றத்தை அமைக்காவிட்டால் அல்லது சர்வதேச நீதிபதிகளை உள்வாங்காவிட்டால் போரின்போது இடம்பெற்ற குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு வடக்கில் ஓர் புறம்பான விசாரணை ஆரம்பிக்கப்படும் என வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார்.

சட்டத்தின் ஊடாகக் கேட்டதை தற்போது முதலமைச்சர் விக்னேஸ்வரன் புறம்பாகக் கேட்கின்றார். இவ்வாறான முதலமைச்சர் ஒருவரைப் பதவியில் வைத்திருப்பது நாட்டுக்கு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். இலங்கையின் நீதிமன்றத்தையும், அரசமைப்பையும் அவர் சவாலுக்கு உட்படுத்துகின்றார்.

ஜனாதிபதி கூறிய ஒரு விடயத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன் எட்டி உதைக்கின்றார். இவ்வாறான முதலமைச்சரது வடக்கின் ஆட்சி தொடர்பில் நாங்கள் எச்சரிக்கின்றோம். இந்த முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கு அவசரகால நடவடிக்கையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அனைத்துப் பிரிவினர்களுக்கும், அதேபோல நாட்டுக்கும் கூறிவைக்கின்றோம். – என்றார்.

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கின் 10ஆவது சந்தேகநபரான ஜெயவர்த்தனா ராஜ்குமார் என்பவரின் விளக்கமறியல் காலம் ஒருவருடம் ஆகிவிட்டதனால் விளக்கமறியல் காலத்தை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிப்பதற்காக நேற்று யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணையின் போதே நீதிபதி இதனைத் தெரிவித்தார். (ஓ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் 12 மணிவரையான 4 மணித்தியாலங்கள் இந்தப் போராட்டம் இடம்பெறும்.

இதன்போது, அவசர நோயாளர் மற்றும் சிறுநீரக நோயாளர் சேவைகள் இடம்பெறும். கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலை, டீ சொய்சா மகப்பேற்று வைத்தியசாலை, காசல்வீதி மகப்பேற்று வைத்தியசாலை, தேசிய புற்றுநோய் மற்றும் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை, பெரதெனிய சிறுவர், பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் இந்த வேலை நிறுத்தம் இடம்பெற மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதி வவுனியாவில் 195 மில்லியன் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப் பட்டு அண்மையில் போக்கு வரத்து மற்றும் பயணியர் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால், இ.போ.ச. பேருந்துகள் அந்த பேருந்து நிலையத்திற்குச் செல்லாமல் பழைய பேருந்து நிலையத்தில் இருந்தே தமது சேவைகளை ஆரம்பித்தனர். இதனால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இ.போ.ச. தரப்பினருக்கும் இடையே முரண்பாடுள் ஏற்பட்டுள்ளன.

இந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கு பல தரப்பினரும் முயன்று முடியாமல் போகவே அண்மையில் வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் பொதுக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதன்பின்னர் இருதரப்பினரும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையாற்ற இணக்கம் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தமக்கு பழைய பேருந்து நிலையத்தையே வழங்கக்கோரி தற்போது இ.போ.ச. தரப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. அவர்களுக்கு ஆதரவாகவே நேற்று வடமாகாண ரீதியாக இ.போ.ச. பேருந்துகள் சேவை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்தப் போராட்டத்தின் காரணமாக மாகாணத்திலுள்ள போக்குவரத்துச் சபை பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

பருவகாலச்சீட்டுக்களைப் பெற்றுப் பயணிக்கும் பாடசாலைக்கு மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களும் மற்றும் பலர் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்ட போதிலும் பயணிகள் வீதிகளில் பேருந்துகளுக்காக காத்திருந்ததையும் தனியார் பேருந்துகளில் நெரிசல்களில் சிக்கி அசௌகரியங்களை எதிர்நோக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் கோரினர். ஆனால் அதற்கு மறுப்பு தெரிவித்த மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ள தங்கள் காணிகளுக்கு முன்பாக படையினர் பயன்படுத்தும் பாதைகளுக்கு முன் கூடாரம் அமைத்துள்ள மக்கள் இரவு பகலாக அங்கிருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

விமானப் படையினரால் விடுவிக்கப்பட்ட காணிகளை அளந்து மக்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என எஸ்.சிவமோகன் எம்.பி. இதன்போது வலியுறுத்தினார்.

ஜனாதிபதி வருகைதந்து கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிப்பார் என்ற மாயை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதை நம்பி மக்கள் ஏமாந்தனர் என வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

இதேவேளை, மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அங்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி உறுப்பினர்கள் தங்களுடன் இருப்பார்கள் என தாங்கள் எதிர்பார்த்தனர் எனவும் அவர்கள் அவ்வாறு செய்யாமல் அங்கிருந்து சென்றனர் என்றும் மக்கள் கவலை வெளியிட்டனர்.

எனினும், படையினர் தங்களை 'அங்கிருந்து' செல்லுங்கள் என அச்சுறுத்துகின்றனர் எனவும் எது வந்தாலும் காணிகள் விடுவிக்கப்படும் வரை தாங்கள் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர். (ம–சி)

# தனியார் மருத்துவக் கல்லூரிகள் நாட்டுக்குத் தேவை என்கிறார் ராஜித

கொழும்பு,பெப்.03

நாட்டில் சில அரச பல்கலைக் கழகங்களிலுள்ள மருத்துவ பீடங்களில் 'சைட்டம்' மருத்துவக் கல்லூரி மாணவர்களை விடவும் தரம் குறைந்தவர்கள் உள்ளனர் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரியை சட்ட ரீதியாக மாற்றும் அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் வெளியிட்ட ஊடக அறிக்கையொன்றில் சுகாதார அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

தனியார் மருத்துவ பீடங்கள் நாட்டில் இருக்க வேண்டும், எம்முடன் அன்று 80 களில் ஒரே மேடையில் இருந்து பேசிய பேராசிரியர் நளின் டி சில்வாவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் எனக் கூறியுள்ளார். பேராசிரியர் காலோ பொன்சேகாவும் இதே கருத்தில் தான் இருக்கின்றார்.

இருப்பினும் அரச வைத்தியர் சங்கம் மற்றும் அதனுடன் உள்ள குழுக்களே கடந்த 2011 இலிருந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதுவா முதலாவது தனியார் மருத்துவக் கல்லூரி? கொத்தலாவலவும் முதலில் தனியார் மருத்துவக் கல்லூரியை அமைத்தார். அங்கு படித்த மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளைக் கொடுத்தனர். வைத்தியத்துறை தனியார் மயப்படுத்தப்படும்போது இலவசக் கல்வி இல்லாமல் போகும் எனக் கூறும் சிந்தனை அன்று இருந்திருந்தால் இதனை எதிர்த்திருக்க வேண்டுமே.

இந்த எதிர்ப்பு சக்திகளின் பின்னால் அரசியல் சக்தியொன்றுள்ளது. இலவசக் கல்வியின் அடிப்படை நாமும் தான் சகலருக்கும் கல்வியைப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது எனவும் அமைச்சர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஓ)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

அச்சுவேலி தோப்பு பகுதியில் 15 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞனை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார். அவரால் பாதிக்கப்பட்ட சிறுமியை சான்று பெற்ற பாடசாலையில் சேர்க்க நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி சிறுமி கடந்த மாதம் 28 ஆம் திகதி தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்றார். அவரை ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்ற இளைஞர் அவரோடு குடும்பம் நடத்தினார் எனக் குற்றம்சாட்டப்பட் டது.

சிறுமியின் பெற்றோர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதற்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அவர் கள் சாவகச்சேரியில் இருந் ததை அறிந்து சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடன் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

அவர்கள் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ரீ.கருணா கரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதிவான் மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்தார். (ம–09)

## 'சைட்டம்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேரணியால் கொழும்பு கோட்டை பகுதியைச் சுற்றியுள்ள பாதைகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறி பல்கலைக்கழக மாணவர்கள் 21 பேர் நேற்று பொலி ஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் நேற்று மாலை கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களைத் தலா 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார். (ஓ)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகரித்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்கு சதித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என தகவல்கள் வெளியாகிப் பரபரப்பாகப் பேசப்பட்டுவரும் நிலையில் முதலமைச்சருக்கு இவ்வாறு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமான மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிக பாதுகாப்பு வழங்குமாறு அறிவித்தல் கிடைத்துள்ளது. அதற்கேற்பவே இந்தப் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

முதலமைச்சரின் பிரத்தியேகப் பாதுகாப்புப் பொலிஸாரை விட சுமார் 25 இற்கும் மேற்பட்ட பொலிஸார் ரி–56 ரக துப்பாக்கிகளுடன் பணியில் ஈடுபட்ட அதேவேளை, ஆயுதங்கள் இன்றி 15 இற்கும் மேற்பட்ட பொலிஸாரும் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களும் அந்தப் பாடசாலை வளாகத்திலும் வளாகத்தைச் சூழவும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சியில் இதுவரை முதலமைச்சர் கலந்துகொண்ட நிகழ்வுகளில் நேற்றைய நிகழ்வுக்கே அவருக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது கஞ்சா வைத் திருந்தனர், கண்ணி வெடி வைத்திருந்தனர் என்றே அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

உண்மையாக சுமந்திரனைக் கொலை செய்வதற்குச் சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தால் அந்தக் குற்றச் சாட்டு ஏன் பின் னர் நிரூபிக் கப்படவில்லை? அவ்வாறு எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்றே இராணுவத் தளபதியும் கூறு கின்றார்.

விடுதலைப்புலிகளை அழித்த காரணத்தால் சிங் கள மக்கள் மத்தியில் தொடர்ந்தும் தன்னையொரு ஹீரோவாகக் காட்டிக் கொள்வதற்காகவே, விடுதலைப் புலிகள் மீள உரு வாகிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வதந்தி பரப்பி வருகிறார். தமிழ் மக்களுக்கு எதிராகப் பேசுவதன் மூலம் தன்னுடைய அரசியல் பலத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் என்பதே மஹிந்தவின் நோக்கம்.

தன்னுடைய சொந்த அரசியல் நலன்களுக்காக எமது இளைஞர், யுவதிகளை மஹிந்த பக டைக் காய்களாகப் பயன் படுத்துகிறார் என்பதே உண்மை. சிங்கள மக்களை ஏமாற்றி அரசியல் செய்ய முனையும் மஹிந்தவின் சூழ்ச்சிகளுக்கு யாரும் துணை போகக் கூடாது என வும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். (ஓ)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டல் குழு ஒன்றை நியமித்தது என்பதும் – தெரிந்தவையே.

எனினும், சர்வஜன வாக்கெடுப்பை அவசியப்படுத்தாத விடயங்களை மட்டும் கொண்ட மாற்றங்களைத்தான் அரசமைப்புக்குச் செய்ய முடியும் எனவும் –

அதற்கு மட்டுமே தாங்கள் ஆதரவு தருவார்கள் என்றும் –

நல்லாட்சி அரசின் பிரதான பங்குதாரர்களுள் ஒரு தரப்பான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் ஒன்றுகூடித் திடீரென முடிவெடுத்தனர்.

இந்தத் திடீர் முடிவால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தடைப்பட்டுப்போனது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவும் முன்னேற்றமின்றி வெறுமனே கூடிக் கலையும் நிலையும் நீடித்தது.

சு.க. தலைவர்களின் இந்த முடிவால் புதிய அரசமைப்பு முயற்சி முட்டுச் சந்தியில் முடங்கிய விவகாரமாயிற்று.

இந்தச் சூழலிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சு.க. தலைவர்கள் பலரையும், தனியாகவும், குழுக்களாகவும், கூட்டாகவும் அழைத்து பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தினார் எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, தனது திடீர் நிபந்தனையை விலக்கிக் கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் இணக்கத்துடன் ஈடுபடத் தாங்கள் தயார் என்ற மனமாற்றத்துக்கு அவர்கள் வந்துள்ளனர் என்றும் –

அது குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் – கூறப்பட்டது.

"புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்குத் திடீரென வந்த இக்கட்டு ஓரளவு நீக்கப்பட்டு விட்டது. இனிமேல் நீங்கள் வழமைபோல தொடர்ந்து புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணியில் ஈடுபடலாம்" – என்ற தகவல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நேற்று முன்தினமளவில் வழங்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராமபாலிகேசன் (மீறா மேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672 கே.கே.எஸ். வீதியிலுள்ள கூவர் சாது அச்சகத்தில் 03.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.